கவியுலகப் பூஞ்சோலை

படைப்பாளிகள் உலகம்

3 ம் ஆண்டு

# மலர்

2019

கவியுலகப் பூஞ்சோலையின்...
மூன்றாமாண்டு மலர் 2019

வெளியீடு : கவியுலகப் பூஞ்சோலை,  தமிழ்நாடு, இந்தியா
நூல் வடிவமைப்பு : தமிழ்நெஞ்சம் அமின், பிரான்சு

முதல் பதிப்பு : ஜனவரி 2019
பக்கங்கள் : 120
அளவு : டெம்மி 1 / 8

# தமிழின் நிலை



உலகமொழி யாவைக்கும்
தமிழ் - மூத்தமொழி என்போம்...

நம்மொழியதற்கு
ஈடுயிணை ஏதுமில்லை சொல்வோம்...

சுவாசத்தின் மூச்செல்லாம்
நம்முள் - தமிழ்வாசம் என்போம்...

நாம், தமிழ்த்தாயின் பிள்ளையென்பதில்
மார்தட்டிக்கொள்வோம்...

"கல்தோன்றி மண்தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்தக்குடி நம் தமிழ்க்குடி" என்று நாம் மார்தட்டிக்கொள்ளும்படி இருபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய மொழியே நமது தாய்மொழியானத் தமிழ் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. உலகில் உள்ள எந்தமொழியும் நம் தமிழ் மொழிக்கு ஈடில்லை என்று பிறமொழியைத் தாய்மொழியாகக் கொண்ட அறிஞர்கள் பலர் வரலாற்றுச் சான்றாகக் குறிப்பிட்டிருப்பது, நாம் தாய்மொழியாய்த் தமிழைப்பெற என்ன தவம் செய்தோமோ என்று எண்ணத்தோன்றும் அதேவேளையில் - அத்தகு செம்மொழியாம் தமிழின் இன்றைய நிலைகண்டு வருத்தங்களும் சூழ்கிறது. இன்றைய சூழலில் பல மொழிகள் அழிவின் விளிம்பில் நின்றுகொண்டிருக்கிறது.

இந்த பூமியில் தற்போது ஆறாயிரம் மொழிகள் உள்ளன. இன்னும் நூறு ஆண்டுகள் கழித்து 600 மொழிகள் மட்டுமே இருக்கும் ஐயாயிரத்து நானூறு மொழிகள் அழிந்துபோகும் என ஐ.நா.வின் மொழியியல் ஆய்வுத்துறை அச்சம் தெரிவித்துள்ளது. எந்த மொழியும் தானாக வளர்வதுமில்லை தாமாக தேய்வதுமில்லை அதைப் பயன்படுத்துவோரின் சூழலைச் சார்ந்தே நிகழ்கிறது. தன்னிடமில்லாத பிறமொழிகளில் உள்ள சொற்களை

ஏற்றுக்கொள்ளும் மொழி அழிவதில்லை ஆனால் தன்னிடம் இருக்கும் சொற்களைத் துறந்து பிறமொழிச் சொற்களை ஏற்றுக்கொள்ளும் மொழி அழிவுப்பாதையில் பயணிக்கிறது என்று மொழியியல் ஆய்வறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். களைகளின் வளர்ச்சி அதிகமானால் பயிர்களின் வளர்ச்சி என்னவாகும்? ஒரு மொழி அழியுமேயானால் அந்த மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட இனம் இந்த உலகில் வாழ்ந்ததற்கான அடையாளமும் அழிந்துவிடுமல்லவா? ஆய்வறிஞர்கள் குறிப்பிடும் அழிவின் பாதையில் பயணிக்கும் மொழிகளின் பட்டியலில் தமிழும் இருப்பது வருந்தத்தக்கதல்லவா? வளர்ந்துவரும் நவீன யுகத்தில் தமிழும், தமிழர்களின் கலாச்சாரமும், பண்பாடும் மெல்ல மெல்லத் தேய்ந்துவருகிறது. அதை சமூகத்தில் நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

இன்றைய சூழலில் தமிழை மதிப்பெண்ணிற்காக மட்டுமே கற்கும் நிலையில்தான் மாணவச் சமுதாயம் உள்ளது. தமிழர்கள் மட்டுமே வாழும் பகுதியில் வசிப்பவர்கள் கூட பிறமொழி கலந்த தமிழைத்தான் பயன்படுத்துகிறோம். நூலில் மட்டுமே இருந்த ஆங்கிலம், பின்பு அலுவலகத்தில் புகுந்தது இப்போது நாம் பேசும் தமிழிலும் இணைந்துகொண்டது. படிப்பறிவு இல்லாத மக்கள்கூட ஆங்கிலச் சொற்கள் கலந்த தமிழைத்தான் பேசுகிறார்கள்.

இதன் விளைவு நாளை என்னவாகயிருக்கும்? தமிழர்கள் ஒருங்கிணைந்து வாழும் பகுதியிலேயே இந்நிலையென்றால் பிறமொழி பேசும் தேசங்களில் பரவி வாழும் தமிழர்களின் நிலைபற்றி நாம் சொல்லவேண்டியதே இல்லை. அவர்களின் சந்ததியினர் தமிழ்மொழியைக் கற்கும் வாய்ப்பும் குறைவுதான். மொழிகளின் பரிணாமம் ஓலைச்சுவடியில் தொடங்கி-காகிதத்தில் வாசம் செய்து - தற்போது கணிப்பொறியில் பிரவேசிக்கிறது. உலகம் முழுதும் தமிழர்கள் பரவி வாழ்ந்தாலும் அவர்கள் தினந்தினம் தமிழைச் சுவாசிக்க இணையதளமே இதயதளமாகச் செயல்படுகிறது.

# கவியுலகப் பூஞ்சோலை

இன்றைய நவீன யுகத்தின் பாதையில் தமிழின் வளர்ச்சிக்காகச் சிறு அளவாவது நீரூற்றவேண்டும் என்ற நோக்கத்தில் தொடங்கப் பட்டச் சிறு முயற்சியே ''கவியுலகப் பூஞ்சோலை'' முகநூல் குழுமம். உலக மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும் விதத்தில் தகவல் தொழில்நுட்பம் வளர்ந்துவிட்ட சூழலில், தமிழ்மொழியே பேசாதோர்களின் தேசத்தில் வாழும் நம் தமிழர்களையும் - தமிழை அவ்வப்போது சுவாசிக்க வைக்கவேண்டும் என்ற நோக்கத்தின் சிறு வெளிப்பாடே "கவியுலகப் பூஞ்சோலை" குழுமம். கவியுலகப் பூஞ்சோலை குழுமம் 2016ம் ஆண்டு தைமாதம் தொடங்கப்பட்டது. கவிதைக்கென்றோர் குழுமமாகத் தொடங்கப்பட்டு முதலில் மாதாந்திரக் கவிதைப்போட்டி நடத்தப்பட்டது. அப்போட்டியில் கலந்துகொண்ட அனைவருக்கும் முகநூல் வாயிலாக உடனுக்குடன் ஊக்குவிப்பு சான்றுகள் வழங்கிச் சிறப்பித்ததோடு, ஒவ்வொரு மாதமும் மூன்று வெற்றியாளர்கள் தேர்வுசெய்யப்பட்டு அவர்களின் முகவரிக்குப் பரிசுப்பொருளாகக் கவிதைநூலும் வெற்றிச்சான்றிதழும் அனுப்பிவைக்கப்பட்டது. நான்கு மாதங்கள் மாதாந்திரக் கவிதைப் போட்டியை மட்டுமே நடத்திவந்த நமது கவியுலகப் பூஞ்சோலைக் குழுமம் ஐந்தாவது மாதத்தில் - தினக்கவிதைப் போட்டியைத் தொடக்கி, தினமும் கவிதைப்போட்டி நடத்தி வெற்றியாளர்களுக்கு முகநூல் வாயிலாகச் சான்றிதழ் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

# தினமும் கவிதைப் போட்டி

முகநூலில் தினமும் கவிதைப் போட்டி நடத்திய முதல் குழுமம் என்ற பெருமை கவியுலகப் பூஞ்சோலையையே சாரும். அத்தோடு மட்டுமின்றிப் படக்கவிதை, கிராமியக் கவிதை, பாடல்போட்டி, ஹைக்கூ எனப் புதுவிதமாகப் போட்டிகளைத் தொடங்கி முகநூலில் பயணித்தக் கவிஞர்கள் மத்தியில் புது உத்வேகத்தை ஏற்படுத்திய முதல் குழுமம் “கவியுலகப் பூஞ்சோலை” என்பதை முகநூலில் பயணிக்கும் முன்னணி கவிஞர்கள் அனைவரும் அறிவார்கள். பல கவிஞர்கள் கடந்த மூன்று ஆண்டுகளாகத் தினமும் கவிப் புனைய தூண்டுகோலாய் செயல்பட்டு, உலகக் கவிஞர்களின் கவிவரிகளால் தினம்தினம் மணம்வீசிக் கொண்டிருக்கும் நமது கவியுலகப் பூஞ்சோலை தற்போது நான்காம் அகவையில் அடியெடுத்துவைப்பதில் அகம் மகிழ்கிறோம்.

இன்றையச் சூழலில் முகநூலில் பல கவிதைக்குழுமங்கள் தொடங்கப்பட்டுதினமும் கவிதைப் போட்டி நடத்திவருவது கண்டு எல்லையில்லா ஆனந்தமடைகிறோம். “கவியுலகப் பூஞ்சோலை” ஊன்றிய விதை இன்று பல விழுதுகள் பரப்பியிருப்பது நமக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருவதோடு நமது நோக்கமும் ஓரளவு நிறைவேறிவிட்டதாக எண்ணி பூரிப்படைகிறோம்.

# ஆண்டுவிழா நிகழ்வுகள்

## முதலாம் ஆண்டுவிழா

கவியுலகப் பூஞ்சோலையின் முதலாம் ஆண்டுவிழா ‘‘கவிஞர்களின் சங்கமம் - 2017’’ தமிழகத்தின் தலைநகரமாம் சென்னையில் (மாங்காடு) உள்ள ஆர்.கே.ராமச்சந்திரா திருமண அரங்கத்தில் வெகுச்சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் கவியுலகப் பூஞ்சோலையின் சார்பாக 100 கவிஞர்களின் கவிதைகள் அடங்கிய முதலாம் ஆண்டுவிழா மலரும், ஹைக்கூ நூற்றாண்டைச் சிறப்பிக்கும் வகையில் - ஹைக்கூ நூற்றாண்டுவிழா மலரும் வெளியிடப்பட்டது.

கவியுலகப் பூஞ்சோலையில் ஓராண்டாய்ப் பயணித்தக் கவிஞர்கள் தங்களின் கவிதைகளை நூலாய் வெளியிட எண்ணியதன் விளைவாக நமது முதலாம் ஆண்டுவிழாவில் - கவியுலகப் பூஞ்சோலை கவிஞர்கள் தனது 17 கவிதை நூல்களை வெளியிட்டுச் சிறப்பித்தனர்.

கவியுலகப் பூஞ்சோலையின் முதலாம் ஆண்டுவிழா நிகழ்வில் - முகநூலின் சிறந்த 10 குழுமங்கள் தேர்வுசெய்யப்பட்டு அந்தக் குழுமங்களின் நிறுவனர்கள் அனைவருக்கும்... முகநூலின் கவிச்சக்கரவர்த்தி விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

ஓராண்டாய்க் குழுமத்தின் கவிதைப் போட்டிகளில் பங்கேற்றக் கவிஞர்களைச் சிறப்பிக்கும் நோக்கத்தோடு கீழ்க்காணும் பட்டியலின்படி "கவிஞர்களின் சங்கமம் - 2017" விழாவில் 170 கவிஞர்களுக்கு விருதுகள் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது .

கவியுலகப் பூஞ்சோலையின்...

- திருவள்ளுவர் விருது - 1
- பாரதியார் விருது - 1
- கவிச்சக்கரவர்த்தி விருது - 10
- கவிவேந்தர் விருது - 37
- கவி இமயம் விருது - 20
- இசைவேந்தர் விருது - 1
- கவிச்சிகரம் விருது - 30
- கவிச்சுடர் விருது - 40
- கவிச்சிற்பி விருது - 30

மேலே குறிப்பிட்டுள்ளபடி, கவியுலகப் பூஞ்சோலையின் முதலாம் ஆண்டுவிழா ''கவிஞர்களின் சங்கமம் - 2017'' விழாவில் 170 கவிஞர்களுக்கு விருதுகள் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

விழா நிகழ்வில் - புதுவிதமான வடிவமைப்பில் 27 கவிஞர்கள் பங்கேற்றக் கவியரங்கம் நடத்தப்பட்டது .

இவ்விழாவிற்குச் சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்து சிறப்பித்த

தமிழ்த்திரு.'சிலப்பொலி'.சு.செல்லப்பன் ஐயா
அவர்களுக்கும்,
தமிழ்த்திரு.'நீதியரசர்'.வள்ளிநாயகம் (உயர்நீதிமன்ற நீதிபதி)
அவர்களுக்கும்,
தமிழ்த்திரு. ஏர்வாடி.இராதாகிருஷ்ணன் ஐயா
அவர்களுக்கும்,

தமிழ்த்திரு.அரிமா.மணிலால்
அவர்களுக்கும்,

தமிழ்த்திரு.கவிமுனைவர்.இளவரசு அமிழ்தன்
அவர்களுக்கும்,

தமிழ்த்திரு.அரிமா.சிந்தைவாசன்
அவர்களுக்கும்,

தமிழ்த்திரு.அகத்தியன் (திரைப்பட இயக்குநர்)
அவர்களுக்கும்,

தமிழ்த்திரு.தியாரு (திரைப்பட பாடலாசிரியர்)
அவர்களுக்கும்,

தமிழ்த்திரு.பிரியன் (திரைப்பட பாடலாசிரியர்)
அவர்களுக்கும்,

தமிழ்த்திரு.நந்தகுமார் (திரைப்பட இயக்குநர்)
அவர்களுக்கும்,

தமிழ்த்திருமதி.வான்மதி (ஆசிரியர் ‘பாவையர் மலர்’ மாதஇதழ்)
அவர்களுக்கும்,

ஆண்டுவிழா கவியரங்கத்தைத் தலைமையேற்று சிறப்பாக நடத்தித்தந்த...

தமிழ்த்திரு.மரபுமாமணி.மா.வரதராசன்
அவர்களுக்கும்,

தமிழ்த்திரு.கருமலைத்தமிழாழன்
அவர்களுக்கும்,

தமிழ்த்திரு.இராமதாஸ் காந்தி
அவர்களுக்கும்,

தமிழ்த்திரு.கா.ந.கல்யாணசுந்தரம்
அவர்களுக்கும்,

தமிழ்த்திரு.கோவிந்தராசன் பாலு
அவர்களுக்கும்,

கவியுலகப் பூஞ்சோலையின் சார்பாக நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். விழா சிறப்படைய இணைந்து செயல்பட்டக் குழும நிர்வாகிகளுக்கும், விழாவிற்கு வருகைதந்து சிறப்பித்த கவிஞர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமிதம் கொள்கிறோம்.

# இரண்டாம் ஆண்டுவிழா

கவியுலகப் பூஞ்சோலையின் இரண்டாம் ஆண்டுவிழா - ''கவிஞர்களின் சங்கமம் 2018'' தமிழகத்தின் நெற்களஞ்சியமாம் தஞ்சைத் தரணியில் (ஒரத்தநாடு ) உள்ள மாணிக்கம் மகாலில் வெகுச்சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவோடு கவியுலகப் பூஞ்சோலையின் ''நூல்திருவிழா'' நிகழ்வும் இணைந்து நடத்தியது வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகும்.

நூல் திருவிழா நிகழ்வில் கவியுலகப் பூஞ்சோலையின் சார்பாக 107 கவிஞர்களின் கவிதைகள் அடங்கிய 10 நூல்கள் வெளியிட்டது சிறப்புமிக்க நிகழ்வாக அமைந்தது.

உலகம் முழுதும் பரவி வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழின உறவுகளில் 107 கவிஞர்கள் - கவியுலகப் பூஞ்சோலையின் ''நூல்திருவிழா'' நிகழ்வில் பங்கேற்று அதன் வாயிலாக கவியுலகப் பூஞ்சோலையின்...

1. ரோஜா மலர்கள்
2. மல்லிகை மலர்கள்
3. முல்லை மலர்கள்
4. தாமரை மலர்கள்
5. செவ்வந்தி மலர்கள்
6. அல்லி மலர்கள்
7. அனிச்சம் மலர்கள்
8. குவளை மலர்கள்
9. கொன்றை மலர்கள்
10. குறிஞ்சி மலர்கள்

ஆகிய பத்து நூல்கள், பத்து விதமான கோணத்தில்

107 கவிஞர்களால் எழுதப்பட்ட கவிதைகளைத் தொகுத்துக் கவியுலகப் பூஞ்சோலையில் இரண்டாம் ஆண்டுவிழாவில் - ''நூல்திருவிழா'' நிகழ்வில் வெளியிடப்பட்டது.

இந்நூல்கள் தமிழகத்தில் உள்ள பல நூலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அத்தோடு இரண்டாம் ஆண்டுவிழா நிகழ்வில் கவியுலகப் பூஞ்சோலை கவிஞர்கள் மூவரின் கவிதை நூல்களும் வெளியிடப்பட்டது.

கவியுலகப் பூஞ்சோலையின் இரண்டாம் ஆண்டுவிழா ''கவிஞர்களின் சங்கமம் 2018'' நிகழ்வில் குழுமத்தின் சார்பாக நடத்தப்பட்ட ஆண்டுவிழா கவிதைப்போட்டிகளில் வெற்றிபெற்ற 218 விருதுகள் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

கவியுலகப் பூஞ்சோலையின்

- வாழ்நாள் சாதனையாளர் விருது - 1
- அப்துல் காலம் விருது - 1
- பூஞ்சோலை புரவலர் விருது - 1
- பாரதியார் விருது - 1
- கவிவேந்தர் விருது - 5
- கண்ணதாசன் விருது - 20
- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் விருது - 30
- அப்துல் ரகுமான் விருது - 20
- கவிச்சிகரம் விருது - 30
- கவிச்சிற்பி விருது - 30
- கவிச்சுடர் விருது - 50

மேலே குறிப்பிட்டுள்ள பட்டியலின் அடிப்படையில் 218 கவிஞர்களுக்கு விருதுகள் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது

ஆண்டுவிழா நிகழ்வில்...

1. மரபு கவிதை
2. புதுக்கவிதை
3. ஹைக்கூ -

எனத் தனித்தனியாக மூன்று அமர்வுகளாகக் கவியரங்கம் நடத்தப்பட்டது.

இவ்விழா நிகழ்விற்குச் சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்து சிறப்பித்த

- மாமதுரை கவிஞர்கள் பேரவையின் தலைவர்... கலைமாமணி. வீரபாண்டிய தென்னவன்

அவர்களுக்கும்,

- திரைப்பட தயாரிப்பாளர்... தமிழ்த்திரு.ராஜசூரியன்

அவர்களுக்கும்,

- தமிழ்த்திரு.அரிமா.சிந்தைவாசன்

அவர்களுக்கும்,

கவியரங்க அமர்வுகளை தலைமையேற்று நடத்தித்தந்த...

- மரபுமாமணி.மா.வரதராசன்

அவர்களுக்கும்,

- தமிழ்த்திரு.கோவிந்தராசன் பாலு

அவர்களுக்கும்,

- கவிச்சுடர்.கா.ந.கல்யாணசுந்தரம்

அவர்களுக்கும்,

- தமிழ்த்திரு.கருமலைத் தமிழாழன்

அவர்களுக்கும்,

- தமிழ்த்திரு.வெற்றிப்பேரொளி

அவர்களுக்கும்,

கவியுலகப் பூஞ்சோலையின் சார்பாக நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

இவ்விழா சிறப்பாக நடைபெற இணைந்து செயல்பட்டக் குழும நிர்வாகிகளுக்கும் விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த க்கவிஞர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

# கவிச்சாரல் - 2018
# மாபெரும் கவியரங்கம்

கவியுலகப் பூஞ்சோலையின் சார்பாக நூறு கவிஞர்கள் பங்கேற்றக் ''கவிச்சாரல் 2018'' மாபெரும் கவியரங்கம் 01.05.2018 அன்று சென்னை மாநகரத்தில் (தாம்பரம் - S.G.S.திருமண அரங்கத்தில்) வெகுச்சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில்

ஒரு மரபு கவிதை அமர்வும், நான்கு புதுக்கவிதை அமர்வுகளும் என ஐந்து அமர்வுகளாக நூறு கவிஞர்கள் பங்கேற்று கவிபாடிச் சிறப்பித்தனர்.

கவியரங்கில் பங்கேற்றக் கவிஞர்களின் கவிதைகள் தொகுக்கப்பட்டு நூலக வெளியிடப்பட்டது.

மரபுகவிதை அமர்வில் பங்கேற்ற கவிஞர்களுக்குக் கவிப்பேரருவி விருதும், புதுக்கவிதை அமர்வில் பங்கேற்றக் கவிஞர்களுக்குக் கவியருவி விருதும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

கவியுலகப் பூஞ்சோலையின் ''கவிச்சாரல் 2018'' நிகழ்விற்குச் சிறப்பு விருந்தினர்களாக வருகைதந்து கவியரங்க அமர்வுகளுக்குத் தலைமையேற்றுச் சிறப்பாக நடத்தித்தந்த...

- தமிழர் தேசிய கூட்டமைப்பின் தலைவர்...
  தமிழ்த்திரு.ஐயா.பழ.நெடுமாறன்
  அவர்களுக்கும்,
- மாமதுரை கவிஞர்கள் பேரவையின் தலைவர்...
  தமிழ்த்திரு. கலைமாமணி.வீரபாண்டிய தென்னவன்
  அவர்களுக்கும்,

- தமிழறிஞர். தமிழ்த்திரு.ஆரூர்.தமிழ்நாடன்
அவர்களுக்கும்,
- திரைப்பட பாடலாசிரியர்... தமிழ்த்திரு.ராஜபாரதி
அவர்களுக்கும்,
- திரைப்பட பாடலாசிரியர்.. தமிழ்த்திரு.நிகரன்
அவர்களுக்கும்,

கவியரங்கில் பங்கேற்றக் கவிஞர்களுக்கும், விழாவினைச் சிறப்பாக நடத்திட இணைந்து செயல்பட்டக் குழும நிர்வாகிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்...

ஒரத்தநாடு நெப்போலியன்
நிறுவனர் : கவியுலகப் பூஞ்சோலை

# நற்றமிழ் வளர்க்கும் சான்றோர்



கவியுலகே கண்டு வியக்கும்
கார்முகிலாய் கவி மழை பொழிந்தே
கடலெனப்பெருகிடும்
காண்போர் வியந்திடவே...

சீர் பெற்றே பார் போற்றும்
கவிப்பூஞ்சோலையாம்
இது கவியுலகப்பூஞ்சோலை

எத்தனை எத்தனைக் கவி மக்கள்
கொஞ்சும் தளர்தடை பயின்று
பேர் பெற்றுச்சென்றனரே ஊர்சிறக்கவே..

...

திறம்வாய்ந்த நல் நிறுவனராம் ஒரத்தநாடு
ஈன்றெடுத்த நெப்போலியன் வழி நடத்திடும்

எழில்மிகு இக்கவிச்சோலையில்
ராசாவாய் கோலோச்சும்
பாலதியாகராசன் நற்தலைமையில்

தென்றலெனக் கவரி வீசிடும் தினக்கவிதை...

கவிகள் பாடிடும் கவின் மிகு போட்டிகள்
உருவாகிய உருவாக்கிய கவிகள்

தினக்கவிதையாய் ஏராளம்... தாராளம்...

அழகுக்குடும்பத்தின் அருமை அன்னையாய்
அரவணைத்துச் செல்லும் ஸ்ரீ சக்தி...

கவி மழையில் கவர்ந்து, வசப்படுத்தி அனைவரையும்
ஒருங்கிணைக்கும் சகோதரி உஷா தேவி பார்த்தசாரதி

பூஞ்சோலையின் அழகுமிகு அணிகலனாய்
சொலிக்கும் தம்பி ஆனந்த் உமேஷ்

குடும்பத்தின் பழம்பெரும் தூணாய்
உயர்ந்து நிற்கும் சேகு அண்ணா

மின்மினியென மின்னலாய் மின்னும்
ஹைக்கூ வேந்தர் ரசிகுணா...

அகலாது அயராது பணிசெய்து
அமைதியின் உருவாய் கோகிலா ஜெயகுமார்

பெரியவராய் பாங்காய் கிராமியம் கொண்டு செல்லும்
அன்பின் உருவாய் செல்லமுத்து பெரியசாமி

பணிவின் உருவாய் வெற்றி வேல் பாண்டியதுரை

துடிப்புடன் செயலாற்றும் மோகன் கரன்

மூர்த்தி சிறிதாயினும் கீர்த்திப்பெரிதாய்
பாடல்போட்டி விஜய்

குறுங்கவிதையின்
மகாராணியாக பீடு நடையிடும் ராஜிலா ரிஜ்வான்

ஆர்ப்பாட்டமில்லா அழகு
மரபுப் பெட்டகம் தர்மா

மரபின் மைந்தராம்  பாவலன் பூவன்
அவர்களின் தலைமையில் மலரும் மரபு

புதிதாய் இணைந்தே நடைபழகி ஒன்றிணைந்த
ஹைக்கூ தனாசர்மா மயூரன்..

அடக்கமான நிறைமதியாய் ஒளிவீசும்
நிறைந்திருக்கும் சகோதரி நீலமேகம்..

அவ்வப்பொழுது எட்டிப்பார்க்கும்
அனுகவியின் மிளிர்வில் குறுங்கவிதை

தினக்கவிதையில் திங்களென ஒளி வீசிய அபிபம்மா

என இவர்களுடன் கவிச்சுடராய்
ஹைக்கூ வில் ஐயா கல்யாணசுந்தரம்

புதிதாக இணைந்தே இனிதாகவே நிறைந்த
சுதா செழியன் அன்பழகி

பிரியா என்றே எங்கள் பூஞ்சோலை
மலர்களாய் மணம் பரப்பும் ஏற்றமிகு எழில் சோலை...

கவியுலகப்பூச்சோலை என்றென்றும் வாழிய வாழியவே...

பூஞ்சோலை பாக்கள் புதிதாய் அரங்கேற
வாஞ்சையுடன் இங்கே வரவேண்டும் - தஞ்சையிலே
நெஞ்சையள்ள  முள்ளிவாய்க்கால் நேரில் அழைக்கவே
பஞ்சமிலா பாக்கள் பரிந்து...

# பொலிவும் புகழும்

கவியுலகப் பூஞ்சோலையின் மூன்றாம் ஆண்டு விழா திருவள்ளுவராண்டு 2049 கவிஞர்கள் சங்கமம் தைத்திங்கள் 12,13 (26.1.19, 27.1.19) ஆகிய இரு நாட்களில் தஞ்சை முள்ளிவாய்க்கால் முத்தமிழ் அரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வில் நூல் வெளியீடு, கவியரங்கம், கருத்தரங்கம், இசையரங்கம் மற்றும் விருதளிப்பு ஆகியன வெகு இனிதே நடந்தேறியது.

விழாவிற்குத் தமிழ் ஆர்வலர்கள், கவிஞர் பெருந்தகைகள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பு செய்தனர்.

இவ்வாண்டிற்கானக் குழும நிகழ்வுகளை உங்களிடையே பகிர்ந்துகொள்வதில் பெருமகிழ்வடைகிறோம்.

இக்குழுமத்தைச் சிறப்பாக இட்டுச்செல்லும் நிறுவனர் ஒரத்தநாடு நெப்போலியன் அவர்களுக்கு எங்களது உளம் நிறை நன்றியினை முதற்கண் தெரிவித்துக்கொள்கின்றோம்...

நிர்வாகிகளான எங்களுக்குச் சிறந்ததொரு வழிகாட்டியாக நிறுவனர் ஒரத்தநாடு நெப்போலியன் அவர்கள் செயல்பட்டு ஆலோசனைகள் பல வழங்கிக் குழுமத்தை முதல் தர வரிசையில் வழிநடத்திச்செல்லும் பாங்கு மிகவும் அருமை... இதுவே இக்குழுமத்தின் வெற்றிக்கானத் தனிச்சிறப்பு எனலாம்...

நிர்வாகிகளின் ஒற்றுமை; அன்பின் ஒருங்கிணைப்பு; மதிப்புறு தலைவர் ஸ்ரீசக்தி அவர்கள், ஒருங்கிணைப்பாளர் உஷா தேவி

பார்த்தசாரதி, தலைவர் பால தியாகராசன் மேலும் அனைத்து நிர்வாகிகளின் அழகிய ஒன்றுபட்ட கூட்டமைப்பு மற்றும் உறுதுணையென நிற்கும் தமிழ்ச் சான்றோர் பலர் என அனைவரும் சேர்ந்து செயலாற்றல் காண்போரை வியப்பில் ஆழ்த்திவிடுவது இக்குழுமத்தின் வெற்றிக்கு மற்றுமொரு காரணம் எனில் மிகையாகாது...

## குழுமச் செயல்பாடுகள்

தினக்கவிதை குறுங்கவிதை மரபுக்கவிதை ஹைக்கூ மெட்டிற்குப் பாடல் மற்றும் சொந்த மெட்டிற்குப்பாடல் இயற்றுதல் எனப்பல்வேறு போட்டிகள் நடாத்திக் கவிஞர்கள் தெரிவு செய்யப்பட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுச்சிறப்பிக்கப்படுகின்றனர்.

இதில் வாரந்தோறும் இருமுறை தினக்கவிதை நடைபெறுகிறது...

நெறியாளராக பாலதியாகராசன், தென்றல் கவி மற்றும் ஆனந்த் உமேஷ் நிர்வாகிகள் அபிபம்மா ஸ்ரீசக்தி மற்றும் எங்களுக்குத்துணையாக அவ்வப்போது உதவிடும் கவிஞர் ஜம்ஷித் ஆகியோரால் உயர்ந்த விழுமிய நிலையில் நடைபெறுகிறது தினக்கவிதை. கவிதைப்போட்டியில் கலந்து கொண்டு கண்ணதாசன் சான்றிதழ்கள் பத்து நிறைவுற்றவர்கள் பாரதிதாசன் நிலையும் பாரதிதாசன் பத்து சான்றிதழ்கள் பெற்றவர்கள் பாரதியார் நிலையும் அடைதல் மீச்சிறப்பு எனலாம்.

குறுங்கவிதை ராஜிலா ரிஜ்வான் கோகிலா ஜெயக்குமார் அனுகவி ரிப்கான் ஆகியோரால் சிறப்பான முறையில் நடத்தப் படுகிறது. அதிக கவிஞர்கள் இப்போட்டியில் பங்கு கொண்டு கவி படைக்கின்றனர்...

ஹைக்கூவினை அருமையாக எடுத்துச்செல்லும் ரசிகுணா கவிஞருடன் கவிச்சுடர் கல்யாண சுந்தரம் ஐயா அவர்கள், தனாசர்மா, மயூரன் கூட்டணியில் நல்லதொரு நிலையை எய்தியுள்ளது. சிறந்த ஹைக்கூ கவிதைகள் தெரிவு செய்யப்பட்டு நூலாக வெளியிடவும் சிறந்த கவிதைகளுக்குப் பரிசுப்பொருளும் வழங்க உள்ளது மற்றுமொரு தனிச்சிறப்பாகும்...

மரபினைக் கொண்டு செல்லும் அற்புத அணியில் தர்மா, ஆனந்த் உமேஷ், பாவலர் பூவன் அவர்கள் நெறியாளர் மயிலையூர் மோகன் என மரபுக்கவிதை களை கட்டுகிறது எனில் இதுவே எங்கள் பூஞ்சோலையின் செறிந்த அழகாம்...

சொந்த மெட்டுக்குப் பாடல் இயற்றும் முயற்சி மெட்டுக்குப்பாடல் என பூஞ்சோலையின் மற்றுமொரு சிறப்பான போட்டியாகும்... இதயம் விஜய் அவர்களின் தலைமையில் கவிதாயினி உஷா தேவி பார்த்தசாரதி சேகு அண்ணா அவர்களால் இப்போட்டி சிறப்பாக நடத்தப்படுகிறது...

கிராமியக்கவிதை பெறுகிறது தனியிடம்... செல்வகுமார் கதிர்காமநாதன் அவர்கள், செல்லமுத்து பெரியசாமி, வெற்றி வேல் பாண்டியதுரை, நிறைமதி இவர்களால் பொலிவுடன் நடைபெறுகிறது கிராமியக்கவிதை.

# ஆண்டு விழா நிகழ்வுகள்

ஆண்டு விழாக் கவியரங்கம் 26.1.2019 அன்று கவியரங்கம் ஆறு அமர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

அதில்,

முதல் அமர்வினைத் தலைமையேற்று தமிழ்த்திரு. கூரா.அம்மாசையப்பன்அவர்கள் தமிழனாக இணைந்திடுவோம் என்ற தலைப்பிற்கும்,

இரண்டாம் அமர்வினைத் தமிழ்த்திரு.நிகரன் அவர்கள் தமிழெங்கள் உயிருக்கு மேல் என்ற தலைப்பிற்கும்,

அமர்வு மூன்றினைக் கவிச்சுடர் கல்யாணசுந்தரம் அவர்கள் நலம் தேடும் நட்பின் சுவடுகள் என்ற தலைப்பில் தன்முனைக் கவிதைகளுக்கும்,

அமர்வு நான்கினைத்தமிழ்த்திரு.வினுபாரதி தலைமையின் கீழ் மறத்தமிழா மரபை மறவாதே என்னும் தலைப்பிற்கும்,

அமர்வு ஐந்தினுக்கு உழவின்றி உழலுமா உலகு என்னும் தலைப்பின் கீழ் தலைமையேற்று தமிழ்த்திரு.வெற்றிப்பேரொளி அவர்களும்,

அமர்வு ஆறினைப் பட்டுக்கோட்டை கவிமுகில் தங்க அன்பு வல்லியார் அவர்கள் தலைமையேற்று உள்ளுவது உயர்வுள்ளல் என்னும் தலைப்பிலும் கவியரங்கம் சிறப்புடன் நடத்தப்பட்டது.

தொடக்கம் மற்றும் முன்னிலை வகித்த எங்கள் நிர்வாகிகள் உஷாதேவி பார்த்தசாரதி சுதா செழியன், தர்மா, பாலதியாகராசன் ஆகியோருக்கும் மனம் மகிழ் நன்றி பல.

அன்றைய தினத்தில் நண்பகல் இரண்டு மணியளவில் கருத்தரங்கம் தமிழ் வளர்த்த நல்லோர்கள் என்னும் தலைப்பின் கீழ் தமிழ்த்திரு.தமிழ்மாமணி, புலவர். வெ.அனந்தசயனம் புதுச்சேரி அவர்கள் தலைமையில் நடைபெற்றது

தமிழ்த்திருவாளர்கள்

- கவிக்கோ.துரை வசந்தராசன்
- முனைவர்.அவ்வை நிர்மலா
- முனைவர்.க.ரேவதி
- பாவலர் ந.பாண்டியராஜன்
- பாவலர்.செல்லமுத்து பெரிய சாமி
- பாவலர்.ஆசிரியர் மயிலையூர் மோகன்

ஆகியோரும் சிறப்புரை ஆற்றினர்.

இரண்டாம் (27.1.2019) நாள் நிகழ்வாக நடை பெற்றக் கவியரங்கம் ஐந்து அமர்வுகளாக நடத்தப்பட்டது.

முதல் அமர்விற்குத் தலைமையேற்று நடாத்தியத் தமிழ்த்திருமதி.சரஸ்வதி பாஸ்கரன் அவர்கள் பார் போற்றும் பாரதி என்னும் தலைப்பின்கீழும்,

அமர்வு இரண்டிற்குத் தலைமையாகத் தமிழ்த்திரு. இராமவேல் முருகன் அவர்கள் விதியை வெல்வோம் வா எனும் தலைப்பிலும்,

அமர்வு மூன்றினுக்குத் தலைமையேற்றத் தமிழ்த்திரு. இராஜபாரதி அவர்கள் முள்ளிவாய்க்கால் நினைவுகள் எனும் தலைப்பிலும்,

அமர்வு நான்கிற்கு மங்காத தமிழே எனும் தலைப்பில் தமிழ்த்திரு.கருமலைத்தமிழாழன் அவர்களும்,

அமர்வு ஐந்திற்குக் கவிதைப் பெண்ணே என்றத் தலைப்பில் தமிழ்த்திரு.பாலு கோவிந்தராஜன் அவர்களாலும் கவியரங்கம் நடாத்தப்பட்டது.

அன்றைய தினத்தில் நண்பகல் நடைபெற்ற இசை அரங்கத்தைத் தலைமையேற்று நடத்தினார் இசைவேந்தர் திரு. செல்வகுமார்...

கவியரங்கத்தில் முன்னிலை வகித்த எங்கள் நிர்வாகிகள் ஆனந்த் உமேஷ், ராஜிலா ரிஜ்வான், வெற்றிவேல், இதயம் விஜய் ஆகியோருக்கும் நெஞ்சம் மகிழ் நன்றி பல...

விருது வழங்குதல் நிகழ்வில்

1. திருவள்ளுவர் விருதுகள் : 7
2. பாரதியார் விருதுகள் : 27
3. பாரதிதாசன் விருதுகள் : 14
4. கண்ணதாசன் விருதுகள் : 31
5. கவிஇமயம் : 24விருதுகள் (மரபுக்கவிதைகள்)
6. கவிச்சிற்பி : 29 விருதுகள் (குறுங்கவிதை)
7. கவிச்சுடர் விருதுகள் : 29
8. ஹைக்கூ வேந்தர் : 5
9. நம்மாழ்வார் விருதுகள் : 30 (கிராமியக்கவிதை)
10. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் விருதுகள் : 21 (பாடல் போட்டி)
11. தமிழ்ச்செம்மல் விருதுகள் : 3
12. தமிழ்த்தென்றல் விருதுகள் :14
13. அப்துல்கலாம் விருதுகள் : 2
14. முகநூலின் கவிச்சக்கரவர்த்தி விருதுகள் : 12

ஆகியன நமது குழுமத்தில் வழங்கப்பட்டச் சிறப்பான விருதுகளாம். இவற்றுடன் நூல் வெளியீடு... முள்ளிவாய்க்கால் சுவடுகள் என்ற நூல் வெளியிடப்பட்டது...

நூலுக்கு அணிந்துரை தந்த காசி ஆனந்தன் ஐயா அவர்களுக்கும்,பட்டுக்கோட்டைஆய்வுச்சுடர்அ.த.பன்னீர்செல்வம் ஐயா அவர்களுக்கும் இனிதான நன்றி பல.

மேலும், கவியுலகப் பூஞ்சோலையின் தலைவர் பால தியாகராசன் அவர்களின் மௌனச் சிணுங்கல்கள் என்ற கவிதை நூலும் வெளியிடப்பட்டது என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறாக எங்கள் கவிப்பூஞ்சோலை மூன்றாம் ஆண்டு விழா இனிதே நிறைவுற்றது. நன்றி.

# பூஞ்சோலைப் பூத்தது
# பொன்னெழில் பூரிக்க

மஞ்சம் விரித்தது
சந்தம் நிறை சிந்து கவிகள்,
நெஞ்சம் நிறைக்க எழுந்தது
நிறைந்தது வளர்ந்தது

கொஞ்சும் அழகிய குழுமத்தில்
பஞ்சமின்றிப் பாவலர்கள்
பாக்கள் புனையவே
விஞ்சியதே சீர்மை வியந்திடத்தான்
விண்ணளவும்

இணைந்தனரே பிணைந்தனரே
இருகரம் கூப்பியே...
கவியுலகப் பூஞ்சோலைதனிலே

அணைத்திடுவோம் நாங்கள் அன்புடன்
அனைவரையுமே... வருக வருக என்றே

வாழ்த்துங்கள் நீவிரும்
வாழிய வாழியவேயென்று

நன்றி!

தென்றல் கவி, (பா.தமிழ்ச்சிட்டு)
செயலாளர் : கவியுலகப் பூஞ்சோலை
பட்டுக்கோட்டை



# விண்ணுயர வேண்டும்!

எந்தை நா தவழும்
எம் முந்தைய மொழியே
நின்னை முன்னிறுத்துவது
யாம் முன்செய்த புண்ணியம்,
மந்தை மனிதராய்
மாமிச விலங்குபின்
ஓடுகையில் விந்தை
கவிஞராலே விண்ணுயர
நின்ற தமிழே!

எனும் எனது வரிகளால் தமிழன்னையைத் தொழுது எனது வாழ்த்துரையைத் தொடங்குகிறேன்.

நமக்கும் நமது தமிழன்னைக்கும் உள்ள பிணைப்பு இன்று உறுதியாக உள்ளதன் பெரும்பங்கு இன்று நம்மையெல்லாம் ஒருங்கிணைத்து நம்மால் இயன்ற தமிழ்ப்பணியினைச் செய்ய தூண்டுகோலாக உள்ள முகநூலினையே சாரும்,

அவ்வழகிய முகநூல் பயணத்தில் என்னுள் இனிய தருணங்களைத் தூவி களிப்புறச் செய்தும், செய்துவருவதும் பல கவிப்பூக்களை மலரச் செய்த கவியுலகப் பூஞ்சோலையைச் சாரும்.

பல அற்புதக் கவிஞர்கள், அருமையான நடுவர்களைக் கொண்டு

சிறப்புற நடைபெற்றுவரும் தினக் கவிதை, குறுங்கவிதை, ஹைக்கூ கவிதை, மரபு கவிதைப் போன்ற அனைத்துப் போட்டிகளும் கவிஞர்களின் இனிமையான கற்பனைகளை அள்ளித் தெளிக்கும் தேனமிர்தம்.

போட்டிகளைத் தொய்வின்றி நடத்தி வரும் அனைத்து கவிஉறவுகளுக்கும் எனது மனம்நிறைந்த நல்வாழ்த்துகள்.

மேகங்கள் பல தன்னை மறைத்தாலும் பிரகாசமாய் என்றும் ஒளிரும் பகலவனைப் போல இன்னல்கள் பல நேர்ந்தாலும் இன்முகத்துடன் தமிழ்ச் சேவையினைப் புரிந்து வரும் நிறுவனர் அவர்களுக்கு எனது நன்றியும்,மகிழ்ச்சியையும் கூறிக் கொள்கிறேன்.

வெல்க தமிழ்,

பால தியாகராஜன்,
கோவை.



# வாழ்க வையம் மகிழ!

“குறு குறு நடந்து
சிறுகை நீட்டி, இட்டும்
தொட்டும்” மயக்குறு
மணம் நிறை சோலை
அழகே!
உனதகவை நான்கின்
தொடர் விழா நினக்கு!

எம்மொழியிலுமிலா
இலக்கணமாய்
அகப் பொருள் கண்ட
அன்னைத் தமிழே!
புகழுகின்றமொழிகள்
அனைத்திலுமே
இயம்பிடா இலக்கணம்
காட்டு புறப் பொருள்
புகுந்திட்ட தமிழே!

வாயுரைக்க வருகு
தில்லை,வாழி நின்றன்
மேன்மையெலாம்!
நித்தம் நித்தம்
கருத்தூறும் கங்கை
கள்வடியும் மலர்கள்
எனக் கவிக்கூட்டம்

இதயமெனும் தோணியிலே
விதவிதமாய்க்
கற்பனைகள் ஓடியாட

நித்தநித்தம்
பாடுகிறாய்!
நித்தியமாய்
வாழுகின்றாய்!
எத்தனைதான்
இசைத்தாலும்
எப்போதுமே
போதவில்லை!

வாய்மையின் வழி
நின்ற ‘ஒரத்த நாட்டான்’
கொடிவிளையாடி
வீசுகின்ற ‘தென்றல்’
ஒர்க்கா மரபின் ஒதிப்
புகழ்ந்திடு ’ராசன்’
ஓராயிரம் பாடலாய்
என்னெஞ்சில் வண்ணம்
காட்டும் தமிழே!
என் செய்வேன்!
எப்படியுரைப்பேன்!

ககனப் பெருவெளியினில்
பரவிக் கற்பனைத் தேரேறி
எங்கள் கனவுகளை
விதைத்தல் சத்தமின்றி நிறைவேற

இருளைக் கிழித்து
ஒளிமின்னலெனத்
தோன்றி நின் புகழ்
நாட்டி காணும்
அனைத்திலுமே
நீயே ஒளியாய்
உமிழ்ந்து நிறைந்து
இன்பமொன்றையே
எமக்கருளி எமை
வளர்ப்பாய் வருக!
பொங்குகின்றப் புதுப்
புனலாய் நீ மேலும்
மேலும் பூரித்துப்
பொங்கித்ததும்பி
நிறைந்து வழிந்திட
என் இதயம் நெகிழ்ந்த
வாழ்த்துகள்... உன்
பணி சிறக்க... தொடர்க!
வாழ்க வையம் மகிழ!

ப்ரியமுடன்... ஸ்ரீ சக்தி

# சாதனைகள் தொடரட்டும்



வணக்கம்.

கவியுலகப் பூஞ்சோலையின் நிறுவனர். ஒரத்தநாடு நெப்போலியன் அவர்களுக்கும், பொறுப்பாளர்களுக்கும், கவிஞர் பெருமக்களுக்கும் முத்தமிழ்க் களம் மற்றும் கம்பன் கவிக்கூடம் நிர்வாகி ஜெ. ஜெயராணியின் வாழ்த்துகள். பூஞ்சோலையில் ஒரு பொன்வீணையாகத் திகழ்கின்றக் கவியுலகப் பூஞ்சோலை ஆண்டுதோறும் விழாக்களையும், கவியரங்குகளையும் சிறப்பாக நடத்தித் தமிழன்னைக்குப் பெருமை சேர்த்து வருகிறது. மென்மேலும் சாதனைகள் படைக்க வாழ்த்துகிறேன்.

**ஜெ. ஜெயராணி,**
நிறுவனர்,
முத்தமிழ்க்களம் மற்றும் கம்பன் கவிக்கூடம்.



# சுடரொளியாய் திகழ்க!

கவிதைகள் கற்பனைகளும் களம் கண்டிட
தவிக்கும் நெஞ்சங்களைத் தருவாகித் தாங்கி
புவியில் புகழாரம் புன்னகையுடன் சூட்டியே
நவிலும் நன்மைகள் நானிலமும் போற்றிட

நிறுவனர் ஒரத்தநாடு நெப்போலியன் தன்னார்வமும்
பெருமைகள் பிறர் பெற்றிட வழிகாட்டியாக
பொறுமையில் சொல்லடிகள் பெற்றாலும் துணிந்து
திறமையில் திறம்படத் திறனாய்வில் பயணிக்கும்

தலைமைக்கு இலக்கணமாய்த் தனியொருவனாகிலும் தவிக்காது
நிலையில் உறுதியாக நிழல்தேடும் கவிகளுக்கு
குலையாத நட்பும் குன்றாத ஆதரவும்
விலையாகாப் பெருமையில் விரிந்த கரத்துடன்

அடைக்கலம் தந்திட்டு அன்பால் பெருமையேற்றி
தடைகளின்றித் தளிர்நடை போடவும் தாங்கியே
மடைதிறந்த பாசத்தில் மற்றவரை மகிழ்வாக்கி
விடையில்லா விவேகத்தில் விரிந்த பெருந்தன்மை

கவியுலகப் பூஞ்சோலை கவிஞர்களின் சரணாலயமாய்
தெவிட்டாத வண்டுகள் தேனமுதம் பருகிட
செவிகளுக்குச் சுவையாய்ச் செந்தமிழ் வளர்ச்சியில்
குவிக்கும் புகழில் குன்றாத பல்வகைப்போட்டி

குறுங்கவிதை தினக்கவிதை குறள் போட்டி
கிராமத்துக் கவிதை பாடல் போட்டி
ஹைக்கூ போட்டியென முன்னோடியானக் குழுமமாய்
மூத்ததமிழாய் முதனின்று முகவுரை ஆனதே

மூன்றாமாண்டு விழா முதன்மையில் கொண்டாடும்
சான்றான குழுமம் சாதனைகள் படைத்து
தோன்றாத திறமைகளைத் தூண்டும் சுடரொளியாய்
ஆன்றோரின் வாழ்த்துகள் அருவியாகப் பொழிந்திட

சிறிய வயதில் சாதித்த பெருமைகள்
வறிய நெஞ்சங்களுக்கு வழிகாட்டியாய் வாழும்
அறிய பெருமைகளையும் அடுத்தவர்க்குக் கொடுத்திடும்
நெறிமுறை சிறந்த நெப்போலியனுக்கும் குழுமத்திற்கும்
மனமகிழ் வாழ்த்துரைக்கின்றேன் சோலை சுகந்தமாக.

உஷாதேவி பார்த்தசாரதி,
மதுரை.



# தமிழ் இனி மெல்லச்சாகும்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட தொடர்ச்சியான இலக்கியங்களைக் கொண்டவொரு மொழியெனின், அது தமிழ்மொழி மட்டுமே எனும் பெருமை எமது தாய்மொழிக்கு உண்டு.

சிலகாலங்களுக்கு முன்னர் வரைகூட "தமிழ் இனி மெல்லச்சாகும்" எனும் அச்சப்பாடான கருத்துகளும் நிலவியதுண்டு. ஆனால் கவிதைக் குழுமங்களின் தோற்றப்பாட்டின் பின் அவ்வச்சம் தேவையற்றதெனும் நிம்மதியான மனநிலை தோன்றியுள்ளது எனலாம்.

முகநூல் கவிதைக் குழுமங்கள் திறமையான கவிஞர்களைக் கண்டுகொள்ளும் களம் என்பதுடன், புதிய கவிஞர்கள் தம்மை வளர்த்துக்கொள்ளும் வகையில் வழிகாட்டும் அன்னையாகவும் விளங்குகிறது. அந்தவகையில் கவியுலகப் பூஞ்சோலையும் பலரை வளர்த்துவிட்டத் தாய்மடியாக விளங்குகிறது என்பது எனது கருத்தாகும். இன்று இத்தனைக் குழுமங்கள் புதிதாகத் தோன்றி தமிழ்ச்சேவை ஆற்றுகின்றன எனின் எமது குழுமமே ஆணிவேராக இருந்தது என்பதை மறுக்க முடியாது. எத்தனைப் பக்க வேர்கள் புதிதாய்த் தோன்றினாலும் ஆணிவேரே அடித்தளமானது என்பது நிதர்சனமானதாகும்.

எமது குழுமம், தமிழைத் தாங்கிடும் ஒரு ஆணிவேராகவும் தன்னை நிலை நிறுத்திவரும் ஒரு மிகப் பெரிய குழுமம் என்பதில் பெருமை கொள்கின்றேன்.

இன்னும் பலகாலங்கள் தனது தமிழ்ப்பணியைச் சிறப்புற ஆற்றி தமிழின் பெருமையை உலகறியச்செய்திடல் வேண்டுமென மனதார வாழ்த்துகிறேன்.

நன்றி!

“வீழ்ந்தாலும் தமிழாய் எழுவோம்”

வாழ்த்துகளுடன்

## கவிதாயினி
## கோகிலா ஜெயக்குமார்



# பாருக்குள் சிறந்ததாய் வளர்க...

கவி மலர்கள் தினம் தினமே
பூத்துக் குலுங்கும் சோலை!
கவினுறு பூஞ்சோலையாம்
கவியுலகப் பூஞ்சோலை - இங்கே
கவிவெள்ளம் தேனாறாய்க்
கரை புரண்டு ஓடும்!
கணக்கற்ற பாவலர்கள் வந்திருந்து
கவியின்பம் துய்த்து மகிழ்வர்!

ஆழிசூழ் உலகெலாம் பரவி வாழும்
ஆன்றோர்க்குத் தமிழ்த்
தளமமைத்தான் கவிதை செய்ய!
சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த
மாமதுரைப் பாண்டியர் போல்
மங்காத புகழ் படைத்தான்!
மாவீரன் நெப்போலியன்
வில்லெடுத்துப் போர்புரியக்
களமமைத்தான் தம் மறவருக்கு!
சொல்லெடுத்துப் பாவெழுதிக்
கன்னல் தமிழ் வளர்க்கக்
கவிஞர்களுக்குக் களமமைத்தான்
நம் ஒரத்தனாட்டான்!

தமிழ்ப் பெருங்கடலில் மூழ்கி
நற்கவிதை முத்தெடுக்கும்
பாவலர்க்குப் பெருமை சேர்த்தான்!

கொலுமுனையில்  பாக்கள் தேடி
சிறு கீறலாய்ச்  செய்த முயற்சி
அகலமாய் ஆழமாய்  உழுது
அகழ்ந் தெடுக்கக் காணுகிறோம்
தமிழ்ப் பாக்களெனும் புதையல் தம்மை!
ஸ்ரீசக்தியென்னும் தலைவரோடு
செயலராய்த் தென்றலுண்டு!
பொங்கு புகழ் படைத்தக் கொங்கு நகர் கோவை தந்த
பாலாவும் தலைவராய்  அங்கே உண்டு!
சீர்மிகு குழுமமாய்த் தமிழ் வளர்க்கும்!
பாருக்குள் சிறந்ததாய்த் தானும் வளரும்!
நான்காவது அகவையதைக் காணும்வேளை
குவளையத்தில் நனிசிறந்த
குழுமமாகத்  திகழட்டும் என்றே கூறி வாழ்த்துகிறேன்!

செல்லமுத்து பெரியசாமி



# பூஞ்சோலைக்குப் பூமாலை..!

கவிப்பூக்கள் ஒன்றிணைந்து
கட்டிவைத்தப் பூமாலை..!

கவிக்கென்று புவிதன்னில்
கவியுலகப் பூஞ்சோலை..!

திகட்டாத தினக்கவிதை
திக்கெட்டும் ஒலித்திடுமே..!

குயில்பாட்டு குறுங்கவிதை
கூவநிதம் இனித்திடுமே..!

மெட்டுக்குப் பாட்டெழுத
மொட்டுக்கள் அரும்பிடுமே..!

துளிப்பாவில் துள்ளிடவே
தும்பிகளும் விரும்பிடுமே..!

கவிக்குறளில் குறள்வெண்பா..!
கண்ணுக்கு விருந்தென்பார்..!

கவியொன்றே இவ்வுலகில்
கவலைக்கு மருந்தென்பார்..!

தமிழதனை வளர்த்திடவே
தரணியதில் வாழ்ந்திருப்பாய்..!

தமிழன்னை அவளென்றும்..!
தஞ்சமிங்கு அடைந்திருப்பாள்..!

கொஞ்சிவரும் நெஞ்சமதில்..!
மிஞ்சிவரும் அருந்தமிழே..!

எஞ்சியுள்ள பிறவிதனில்..!
துஞ்சவிடு உன்மடியில்..!

அழியாத வரலாறும்..!
அகிலத்தில் நற்பேரும்..!

உளியாகி நீயிருக்க
உளந்தன்னில் உரமாகும்..!

களிப்போடு நடைபோடும்..!
கவிச்சோலை விதைபோடும்..!

மண்ணோடு மடியாத
வரம்பெற்று மரமாகும்..!

நீடுழி நீவாழ நீரோடை போலோட...!
ஏட்டினில் நிலைத்திருப்பாய்..!
இவ்வுலகில் நிறைந்திருப்பாய்..!

தடையாதும் முடிவாக..!
முடிவில்லாத் தொடராக..!

என்றென்றும் தமிழ் வாழ்க..!
எங்கெங்கும் தமிழ் ஆள்க..!

ஆனந்த் உமேஷ்



# அறிவொளி யேற்றி அன்பில் வளர்க!

பன்னிருசீர் விருத்தம் :

அடர்வன மனத்துள் அறிவொளி யேற்றி
அன்பில் அரவணைக்கும்
அந்தமிழ்ப் பாக்கள் அரனவன் உருக
வாக்கும் திறனளிக்கும்
சுடர்விடு மெழியேழ் சுரங்களிற் தவழுஞ்
சூழற் கொடுத்தழைக்கும்
சோர்வினில் வீழ்ந்தாற் துயிற்களைத் தெழுப்புஞ்
சொந்தம் துணையிருக்கும்
படர்கொடி நிலத்தில் பனிமலர் விரித்து
மணந்தேன் தருவதுபோல்
பார்மிசை வளர்ந்து பருகிடக் கவித்தேன்
படைத்துத் தமிழ்வளர்க்கும்
இடர்களை விலக்கி இஃதொரு சேவை
என்று நினைந்துழைத்தே
இக்கவிச் சோலை ஏற்றிடும் புகழில்
என்றும் அகல்விசும்பே...

இதயம் விஜய்..

# தமிழ்வளர்த்து வெல்க!



அலைகடலது அமைதியாக உறைந்திருக்க அங்கே அரங்கேறியது அரக்கர்களின் அட்டூழியங்கள். வெறித்தனமாக தமிழரை வேட்டையாடியதில் உதிர்ந்த சருகாக நிறைந்திருந்த மனித உடல்களையும், ஊனமாகி உதிரம் சொரிய எஞ்சிய எச்சங்களாக ஊர்ந்து வந்து உயிர் காத்துக்கொண்ட உறவுகளையும் மற்றும் காணாமற் போனோர்களையும் நினைவு கூறும் வகையில் "முள்ளிவாய்க்கால் சுவடுகள்" எனும் தலைப்பில் கவிதைப்போட்டி நடாத்தித்தமிழர்அடைந்தஅவலங்களைஉலகுக்குவெளிக்கொணரும் வகையில் அதை நூலாக்கம் செய்திருக்கும் எமது கவிக்குழுமமான "கவியுலகப் பூஞ்சோலை" குழுமம் ஆற்றிடும் இப்பணி போற்றத்தக்க விடயமாகும்.

இந்நூல்வாசகர்மனதில்நீங்காதவலிகொடுக்கும்வடுக்களை மெல்ல இதமாய் வருடிப் போகும் என்பதில் எந்த ஐயமுமில்லை. தமிழ் வளர்க்கும் இக்குழுமம் தமிழர் அவலங்களைச் சித்தரித்துக் காட்டி தமிழர் எதிர்காலத்தைச் சிந்திக்கத் தூண்டியிருப்பது பெரும் ஆறுதலைத் தருகிறது. கவியுலகப் பூஞ்சோலையெனும் இக்குழுமம் மென்மேலும் சிறப்புடன் இயங்கி சிகரம் தொட இதயப்பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ரசிகுணா.



# சோலையே வாழ்க!

திறமை கொள் பாவலர்
வெற்றி - திலகமதேந்திட
தமிழ் மொழி கொண்டு
நற் - தரணியை ஆண்டிட
துணை நின்றாடிடும்
சோலையே வாழ்க! வாழ்க!

அளவிட முடியா ஆழ்கடல் என்றால்
அன்னைத் தமிழ் என்பதில் ஐயமேதுமில்லை
ஆதி மொழியாம் நம் மொழி கற்றுணர்ந்தவர்
சிறந்ததொரு ரசனை உள்ளம் கொண்ட ரசிகராக
மாற்றம் பெறுவர் அத்தனை அழகு நிறைந்த
படைப்புக்களைத் தன்னகத்தே கொண்டியங்குகின்றது
நம் தமிழ் மொழி

பண்டைய காலத்தில் நமது மொழி மூதாதையர்கள் பேசுவது கூட எதுகை மோனை கலந்து இசை நெளிவுகளோடுக் கவிதை போன்றே இருந்திருக்கின்றது

காலப்போக்கில் பேச்சு விதம் மாற்றமடைந்து தற்போது நாம் பேசுகின்றவிதத்தில்வந்துள்ளது பொதுவாகநாம்இப்போதெல்லாம் தமிழ் பேசுவது மிகக் குறைவாகவே உள்ளது உதாரணமாக ஐந்து வார்த்தைகள் கொண்ட ஒரு வசனம் பேசுகின்றோம் என்றால்

குறைந்தது மூன்று வார்த்தைகளாவது ஆங்கிலத்தில் இருக்கின்றது இவ்வாறு அடிப்படை மொழியை விட அறிந்து கொண்ட மொழிக்கு முன்னுரிமை கொடுக்கும் நம்மிடையே தமிழ் மொழி காக்கும் தலை சிறந்த தொண்டைப் புரிந்து வரும் பல்வேறு அமைப்புகளோடு முகநூல் வழியாக கவிதை வடிவங்களைச் சிறப்போடு புனைகின்ற வித்தகர்களை அடையாளம் கண்டு அவர்களைப் பாராட்டி அவர்களின் வளர்ச்சியில் துணை நிற்கும் கவியுலகப் பூஞ்சோலை குழுமத்திற்கும் அதன் ஆரம்ப கர்த்தா ஒரத்தநாடு நெப்போலியன் ஐயா அவர்களுக்கும் மற்றும் ஏனைய நிர்வாகிகள் அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்

தமிழுடன்

**அ.மயூறன்**
மட்டுநகர், இலங்கை



# ஏற்றம் பெற்று வாழியவே.!

கவியுலகப் பூஞ்சோலையாய் வளர்ந்தோங்கி
கவிகள்பல கண்டு களிப்புற்றே பாரினிலே
அறிவுப் பசியோடபல கவிதை தந்து
அனுபவிக்க அனுதினமும் வழங்கி வந்தாய்.!

சிந்தனையைச் சீர்தூக்கி சிறகடிக்க விட்டனையே
நிந்தை செய்யுலகில் நிகரில்லா வெற்றிக் காண
சந்தமிகுக் கவிகள் பல இங்கு கண்டோம்
விந்தைமிகு எழிலான எம் செம்மொழியில்.!

ஒப்பில்லாத் தமிழ் மொழியை உயர்த்திடவே
தப்பில்லாக் கருத்தழகில் கவிதைக் கொண்டு
நிகரில்லாச் சாதனைகள் படைத்து நிதமும்
நீந்திவந்து மூன்றாம் ஆண்டைத் தொட்டுவிட்டாய்.!

திருக்குறள் தந்த தீந்தமிழும் சிறப்புபெற்று
தெவிட்டாத தெய்வத் தமிழையும் வளரச்செய்து
வன்மைமிகுக் கவியாற்றல் வளர்ந்தோங்க
வழி வகுத்துத் தந்ததுவே கவியுலகப் பூஞ்சோலை.!

பெருமைமிகு நெப்போலியன் பேரன்பு பால தியாகராஜன்
பெண்ணினத்தின் பெருமகளாய் தென்றலென ஸ்ரீசக்தியென
கருத்தாக கனிவாக கருத்து நல்கி, நிறைந்த அன்பினால்
கனிந்ததுவே மலர்ந்ததுவே கவியுலகப் பூஞ்சோலை.!

நினைத்தாலே நெஞ்சமெல்லாம் இனிக்கும் வண்ணம்
நித்தம் நித்தம் புதியதொரு தலைப்புக் கொண்டு
திட்டமிட்டுச் செயல்கள் பல செய்து வென்றாய்
திருக்குறளின் சுவைபோல இனிதே வாழ்வாய்.!

கவிஞர்களை மகிழ்வாக நிறைவாய் பெற்றாய்
களிப்புடனே கவிபடைத்து புகழும் பெற்றாய்
குலையாத மன உணர்வு அனைத்தும் ஒன்றாய்
குறையாத புகழோடுச் சுடரொளியாய் வாழ்வாய்.!

வண்ணம் பொங்கும் சந்தப்பா வடித்து
வழங்கும் கவிகள் பலர் கண்டாய்
உண்ணத் திகட்டா அமுதைப் போலே
உவந்தே தந்தனரே பல பாக்களை நன்று.!

எளிமைக் கொஞ்சும் அழகுத் தமிழில்
ஏற்றம் மிகுந்த ஓசைநயம் கொண்டு
உள்ளத்தை உயர்த்தும் கருத்துக்கள் கொண்டு
உயர்ந்த நூலாய் மலர்ந்து வாழ்வாய்.!

பேறாய் எண்ணி மகிழும் கவிகள்
பேறுகள் பெறவே சாதனை படைத்து
ஏறு போலே நிமிர்ந்து நின்று
ஏற்றம் பெற்று வாழிய வாழியவே.!

நிறைமதி நீலமேகம்,
பெண்ணாடம்.



# சீர் பெற்றே பார் போற்ற வாழி!

இன்றைய தமிழ் இலக்கிய உலகில் பெரும்பங்கு வகிக்கின்றன... முகநூல் குழுமங்கள். இதில் ஆகச் சிறந்த குழுமமாக "கவியுலகப் பூஞ்சோலை" விளங்குகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. குழுமம் தொடங்கி மூன்று ஆண்டுகள் ஆன நிலையில் நூற்றுக்கணக்கான கவிஞர்களைப் பயிற்றுவித்து உருவாக்கியுள்ளது பெருமை. பல்வேறு தலைப்புகளில் கவிதைப் போட்டிகள், ஹைக்கூ சூழல் மற்றும் படக் கவிதைப் போட்டிகள் நடத்திச் சான்றுகள், விருதுகள் வழங்கி வருவது சிறப்பு. இதன் நிறுவனத் தலைவர் ஒரத்தநாடு நெப்போலியன் அவர்கள் நிர்வாகிகளைச் சிறப்பாகத் தெரிவுசெய்து வெற்றி கண்டுள்ளார். அனைத்து நிர்வாகிகளும் இந்தக் குழுமத்துக்குப் பெருமை சேர்த்துள்ளனர். ஆண்டுவிழாக்களில் தமிழ் இலக்கிய ஆளுமைகளை வரவழைத்து சிறப்பு செய்து வருவது குறிப்பிடத்தக்க தமிழ்ப் பணியாகும். பல்வேறு கவியரங்கங்களைப் பல இடங்களில் நிகழ்த்தி தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ளனர். கவியுலகப் பூஞ்சோலையில் மூன்றாமாண்டு விழா எல்லா சிறப்பு அம்சங்களுடன் விளங்குவது மகிழ்வு. விழா சிறக்கவும் தமிழ் இலக்கிய வரலாற்றில் நல்லதொரு தடம் பதிக்கவும் எனது மனமார்ந்த வாழ்த்துகள். அனைத்து நிர்வாகிகள் மற்றும் குழும உறுப்பினர்கள், கவிஞர்கள் அனைவருக்கும் எனது இனிய வாழ்த்துகள்.

"கடந்து செல்லும்
காற்றும் கவிபாடுகிறது
கவியுலகப் பூஞ்சோலையில்"

அன்புடன்,

**கா.ந.கல்யாணசுந்தரம்**
சென்னை

# விண்ணெட்டும் புகழீட்டவே



கவியுலகப் பூஞ்சோலை கமழட்டும் மணமாக!
புவியெங்கும் போற்றிடவே புகழ்மாலை சூடட்டும்!

செவியெங்கும் கவியோசை ஒலிக்கட்டும் இதமாக!
குவியட்டும் வெற்றிகள் குறைவின்றி வளமாக!

ஈராண்டு நிறைவெய்தி இறும்பூதும் வேளையில்
நூறாண்டு களம்காண வாழ்த்திடுவோம் மனமார!

மூன்றாம் ஆண்டுவிழா முத்தாய்ப்பாய் விளங்கவே
முள்ளிவாய்க்கால் முற்றத்தில் முத்தமிழின் சங்கமம்!

எண்ணற்ற விருதுகள்! ஏற்றமிகு போட்டிகள்!
எண்ணத்தின் வண்ணத்தில் மின்னிடும் சோலையாம் -
தஞ்சை மண்ணிலே..!

கொண்டாடும் மாபெரும் விழாவில்
விண்ணெட்டும் புகழீட்டி வென்றிடவே..!
வாழ்த்திடுவோம்!

**மு. மணிமேகலை**
ஓசூர்



# கனிவான திருச்சோலை

கவியுலகப் பூஞ்சோலை
கனிவான திருச்சோலை
பூவுலகில் பூத்திட்ட
புகழ்மிகுப் பெருஞ்சோலை
நவின்றுவரும் கவிக்காக
நற்றமிழைச் சுவாசிக்கும்
செவியினிக்கும் கவிதைகளைச்
சேர்த்தே தினம் ரசிக்கும்.

இதயத்தின் மகிழ்வுக்காய்
இனிதுடன் போட்டி வைத்து
உதயத்தின் வரவுக்குள்
உயர்ந்திட்ட உயர்சோலை
விதவிதமாய் தலைப்பெடுத்து
வியக்கின்ற வகையினிலே
இதமாகச் சான்றளிக்கும்
இன்பக்கவிச் சோலை..

ஆர்பாட்டம் இல்லாத அழகுதிருச் சோலைக்குள்
சீர்பாட்டைச் சிறப்புடனே சிந்தையிலே உயிர்வித்து
வேராகி விளைந்திட்ட விழுதுகளின் விவரத்தைப்
பேராக்கிப் பெருமைக்குள் பெற்றிட்ட என்சோலை...

வாலிக்கும் புகழ்சேர்த்து
வையகத்துக் கவியாம் கண்ணணின்
தாசனுக்கும் அணி சேர்த்து
பொதுவுடமை நாயகனாம்
பாரதிதாசனுக்கும் மனம் நிறுத்தி
பாரதியின் வழிவந்த
பண்பட்ட தமிழ்ச் சோலை.

இருட்டறையில் இருந்திட்ட
எத்தனையோ கவிஞர்களைக்
கருத்துடனே கணக்கிட்டு
கவியெழுத வைத்திட்ட
உருத்தான உயர்சோலை
ஒன்று உண்டெனில்
விருதாக நிற்கின்ற
இவ்வெற்றிச் சோலைதானே.

தாய்மொழியை வளர்ப்பதற்கே
தன்மானம் காத்துநின்று
வாய்மொழியில்லாத வண்ணச் சிறகாகி
தாய் போலக் காத்துநிற்கும்
தளிரானப் பசுஞ்சோலை
வாய்மைக்குள் சிரித்தபடி
வரமாக நிற்கிறதே.

என்னை எழுத வைத்த இப்பெரும் சோலைக்குள்
கண்ணாகக் கடமையாற்றும் தென்றல் கவிபோல
மனதுக்கு இதமளிக்கும்
தென்றலின் துணைபோல
வந்துநான்கலந்தேன்.
தந்தேன் கவி பலவே

பரணி சுப சேகர்
மதுரை.



# சேவைபல செய்து வளர்க!

மூன்று தமிழ் என வகைப்படுத்தப்பட்ட எம் தமிழ் ஓலைச்சுவடிகளிலும், கல்வெட்டுகளிலும் ஒளிர்ந்த தமிழ், காகிதத்திலிருந்து கணினிக்கு நகர்ந்த தமிழ் இன்று முகநூலில் முத்திரை பதிக்கிறது. உலகத் தமிழரையெல்லாம் ஒரு குடையின் கீழ் திரளச் செய்கிறது.அவர்தம் திறமைக்கெல்லாம் களம் அமைக்கிறது.

தமிழ் வளர்க்கும் முனைப்புடன் பலப்பல குழுமங்கள். அவைகளுள் தனக்கெனத் தனித்துவத்துடன் இயங்கும் கவியுலகப் பூஞ்சோலை தன் பயணத்தில் மூன்றாம் ஆண்டில் அடியெடுத்து வைப்பது கண்டு அகமகிழ்கிறேன்.

குழுமம் தொடங்குவது எளிது. தொடர்ந்து நடத்துவது.. அதுவும்சிறப்பாககொண்டுசெல்வதுஅரிது.கவியுலகப்பூஞ்சோலை கவிஞர்களின் கற்பனைக்குச் சவால் விடுவது போல நாள் தோறும் போட்டிகள்நடத்திஅவர்களின்கவியாற்றலைவளர்த்துக்கொள்ளும் வாய்ப்புகள் வழங்கித் திறமையானவர்களுக்குச் சான்றிதழ் அளித்து அரும்பணியாற்றிவருவது பாராட்டுக்குரியது.

குழுமம் சிறப்பாகச் செயல்பட அதன் தலைவர் மற்றும் பொறுப்பாளர்களின் ஒத்துழைப்பு அவசியம். அவ்வகையில் தமிழ் வளர்க்கக் கவியுலகப் பூஞ்சோலை கண்ட நிறுவனர் ஒரத்தநாடு நெப்போலியன், தலைவர் பாலதியாகராஜன், செயலாளர் தென்றல் கவி, மதிப்புறு தலைவர் ஸ்ரீசக்தி மற்றும் நிர்வாகிகள் அனைவருக்கும் வாழ்த்துகள்.

நானும் இந்தக் குழுவின் போட்டிகளில். பங்கேற்று சான்றிதழ்கள் பெற்றிருக்கிறேன். ஆண்டுவிழாப் போட்டிகளில் கலந்துகொண்டு விருதும் பெற்றிருக்கிறேன். இவர்கள் நடத்தியப் போட்டிகளில் பலமுறை நடுவராக இருந்து வெற்றியாளர்களைத் தேர்ந்து எடுத்திருக்கிறேன்.

சிலமாதங்களுக்கு முன் இக்குழுமம் கவியரங்கம் ஏற்பாடு செய்து வெற்றிகரமாக நடத்தியதும் குறிப்பிடத்தக்கது.

இன்னும் பல சேவை செந்தமிழுக்குச் செய்து இக்குழுமம் வளர்ந்து படர என் வாழ்த்துகள் எந்நாளும் உண்டு.

வாழ்க வளர்க

அருணா ரகுராமன்



# பூஞ்சோலை செழிக்கட்டும்!

தமிழார்வலர்களே... இனிய நல்வணக்கங்கள்!

வாழ்வாங்கு வாழ்ந்து வழிவந்த மொழியாம் நம்மொழி அன்னையின் கருவினிலே உருவான அற்புத மொழியாம் நம் தமிழ்மொழி அந்த மொழியின் சிறப்பே ''தேன்சொரியும்'' தெவிட்டாத கவிதைகளாம்!...

அத்தகைய கவிகளை இயற்றி எழுத்தினால் இன்பத்தை வடித்திடும்நம்கவிப்பெருமக்களின்நிலையறிந்துமுகமறியாமுகநூலில் அவர்களுக்கான ஒரு தனிச்சிறப்பை உருவாக்கி மேலோங்கிடச் செய்திட்டப் பெருமைக்குரிய குழுவாக வலம்வருகிறதே தமிழின் வளர்ச்சியோடு இணைந்து தானும் வளர்ந்துகொண்டே நமது தமிழ் மலரின் பூங்காவனமாம் "கவியுலகப் பூஞ்சோலை" முகநூல் குழுமம்!...

எம் கவிப்பெருமக்களின் சொல்லாற்றலையும் எழுத்தாற்றலையும் இவ்வுலகிற்கு எடுத்துரைத்து சிகரம் தொட வழியமைத்துக் கொடுத்தக் குழுமத்தின் தன்னிகரில்லாத் தலைமை நிறுவனர் விளைச்சலின் பெயர்போன ஊரில் பிறந்த வீரமகன் திரு.ஒரத்தநாடு நெப்போலியன் அவர்களையும், செயற்கறிய பணியினைச் செழிப்புடன் செய்து முடித்திடும் தலைவர் திரு.பாலதியாகராஜன் சகோதரர் மற்றும் பெண்ணினப் பெருமையாம் குளுமையை பெயரினிலே தாங்கி அனைவரையும் இன்பமுடன் வருடிவரும் செயலாளர் அன்புச்சகோதரி திருமதி. தென்றல்கவி அவர்களையும்

மேலும், அன்னைபோல் அரவணைத்திடும் அன்பின் மதிப்புறு தலைவர் சகோதரி ஸ்ரீசக்தி அவர்களையும் வாழ்த்துகிறேன்.

வையகமுள்ளவரை உணர்வோடு நிறைந்த அழிவில்லா மொழியாம் நம் தமிழ்மொழியோடு இணைந்த அவர்களது பணி தடையின்றி இன்ப ஊற்றெனப் பொங்கி வழிந்திட, நம் மனதோடு உறவாடி உண்மையும் நேர்மையும் பக்கத்துணையாக எல்லாம்வல்ல இறைவனது நல்லாசி பெருகட்டுமென நல்வாழ்த்துகூறிக் கொள்ள கடமைபட்டிருக்கிறேன் நல்லுறவுகளே!

உலகமுள்ள வரை கவியுலகம் வாழட்டும்! மொழிகள் உள்ள வரை பூஞ்சோலைச் செழிக்கட்டும் எனக்கூறி வாய்ப்பிற்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். என்றும் தித்திக்கும் தேனமுதாம் நம் தமிழோடே...!

தமிழ் வாழ்க!... தமிழினம் வளர்க...!

நூர்ஜஹான் சாலி



# தமிழில் தழைக்க வாழ்த்துகிறேன்!

தமிழுக்குத் தென்றலாய்
சோலைக்கதிரைத் தாங்கும்
பூஞ்சோலை மலராய்
தாய்மடித் தமிழில்
கவிஞர்களை வளர்த்து
கவிதைப் பயிருக்காக
நீண்ட காலமாக உழைக்கும் குழுமம்
உண்மையில் கவியுலகத்திற்குள்
கவிஞர்களை இட்டுச் செல்லும்
சிறப்பான குழுமம் இஃது.
கவியுலகப் பூஞ்சோலை நிறுவனரும் நிர்வாகிகளும்
அன்பாகவும் பண்பாகவும் செயலாற்றுபவர்கள்.
இவர் மூன்றாம் ஆண்டு மட்டுமல்ல பல ஆண்டுகள்
தமிழில் தழைக்க தழைக்கக் கவிதை தருவார்கள்.
வாழ்த்துகள் அனைவருக்கும்.

கவிஞர் பாக்கியலட்சுமி.

# புதுமணங்கள் தினம் வீச வாழ்த்துகின்றேன்!



கவியுலகப் பூஞ்சோலைக் குழுமம்
காலத்தால் மூன்றாண்டை முடிக்கும் வேளை
முத்தமிழால் வாழ்த்துரைக்க யானும் வந்தே
முனைகின்றேன் இன்பத் தமிழோடு இணைந்து

இரண்டாயிரத்து பதினாறின் தையில்
இருத்தெழும்பி கவிதைகளால் நிறைந்து
நிறுவனராய் நெப்போலியன் இயங்க
தலைவராம் ஸ்ரீசக்தி பால தியாகராஜாவுடன்

தனித்துவமாய் இயங்கி வந்த கவியுலகப்பூஞ்சோலை
தாங்கிவந்தார்  தென்றல்கவிச் செயலாளராய்
வழிகாட்டும் இவர்களது பாதையிலே
வாழ்நாளில் மூன்றாண்டு முற்றுப் பெற்றதே

இன்பமானக் கவி வெள்ளம் இணைத்துக் கொண்டு
எல்லோரின் மனதினிலும் இன்பம் நிறைத்தாய்
அன்புக் கவிதாயினியாய் நல்லாசித் தந்து
அகிலம் சிறந்திடவே வாழ்த்துகின்றேன்

பொன்னாக மின்னுகின்றப் புதுமைகளை
புதுக்கவியில் வெளிக்காட்டும் கவியுலகின்
பூஞ்சோலைப் பூத்தென்றும் மலரால் நிறைந்து
புதுமணங்கள் தினம் வீச வாழ்த்துகின்றேன்

பல்லாயிரம் வாழ்நாட்கள் தங்க வேண்டும்
பாரினிலே பறைசாற்றி வாழவேண்டும்
வருகின்ற காலங்களில் வல்லமையாய்த் திகழ
வாழ்த்துகிறேன் இலங்கை கவிதாயினியாக....

புவனேஸ்வரி சண்



# கவிவடிவங்களை மெருகேற்றி வாழ்க!

இன்று எங்கும் பரந்து விரிந்து தன்கைகளை உலகெங்கும் பரப்பி மக்களைத் தன்வசப்படுத்தி வைத்துள்ள முகநூல் என்ற அறிவியல் கண்டுபிடிப்பின் வழியாகத் தமிழ் மொழியையும் அதன் செய்யுள் வடிவங்களையும் மரபுகளையும் அழியாமல் காத்து வளர்த்து மேம்படுத்தி வருகின்ற முகநூல் குழுமங்களில் தனக்கென ஒரு தனியிடத்தைப் பிடித்து தன் பணிகளைச் சிறப்பாகச் செய்துவரும் கவியுலகப் பூஞ்சோலை முகநூல் குழுமம் இப்போது தனது மூன்றாவது ஆண்டு விழாவை முன்னெடுத்து நடத்த உள்ளது. இந்நிகழ்வு தமிழ்கூறும் நல்லுலகில் பெரும்வரவேற்பையும் ஆதரவையும் பெற்றுத்தரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இன்றைய நாளிதழ் மாதஇதழ்களில் தமிழ்க்கவிதைகளுக்குப் பெரிதும் முக்கியத்துவம் தராத இக்காலத்தில் முகநூல் குழுக்கள் கவிதைகளுக்கு முக்கியத்துவம் தந்து புதிய கவிஞர்களை நாளும் உருவாக்கி அவர்களின் தன்னம்பிக்கையை வளர்த்துவருகின்ற பணிகளில் கவியுலகப் பூஞ்சோலையும் ஒரு முக்கியப் பங்காற்றி வருவது உள்ளங்கை நெல்லிக்கனியே.

மரபுக்கவிதை புதுக்கவிதை ஹைக்கூ கவிதைகள் என கவிதைகளின் அனைத்து இனங்களிலும் தனது தடங்களைப் பதித்து கவிஞர்களைப் புத்தகம் வெளியிடும் அளவுக்கு அவர்களது நம்பிக்கையை ஊக்குவிக்கும் பணிகளைக் கவியுலகப்பூஞ்சோலை குழுமம் திறம்படச் செய்கிறது. சென்ற ஆண்டுவிழாவின் போது 10

வகையான தலைப்புகளில் கவிஞர்களிடமிருந்து கவிதைகளைப் பெற்று புத்தகமாக்கியப் பெருமை இக்குழுமத்தையே சாரும்.

இவ்வாண்டு விழாவிலும் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு களைப் புத்தகமாக்கி வெளியிடுவது மிகவும் பாராட்டுக்குரியது.

தமிழகமெங்கும் - பாரத நாடெங்கும் - இன்று உலகமெங்கும் உள்ள தமிழ்க்கவிஞர் பெருமக்களுக்கு நன்கு அறிமுகமான முகநூல் குழுமங்களில் தனக்கென ஒரு தனியிடங்கண்ட கவியுலகப் பூஞ்சோலை மென்மேலும் வளர்ந்து தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு உதவவேண்டும் என மனதார உளமார வாழ்த்துகிறேன்.

தமிழின் மரபு மாறாமல் அதனை வளர்த்து புதிய மரபு இலக்கிய இலக்கணநூல்களை கவிஞர்கள் வழி யாத்து உலகிற்களிக்க வேண்டுமென்றும் தமிழில் புதிய கவிவடிவங்களை உருவாக்கி மெருகேற்றி ஆவணப்படுத்த வேண்டுமென்றும் வாழ்த்துகிறேன். கவிதை வடிவங்கள் இலக்கிய இலக்கணங்கள் குறித்தும் இலக்கியக் கதாபாத்திரங்கள் வடித்த விதம் இலக்கியங்கள் உலகிற்களித்த உலகிற்குரைத்த நெறிகள் நீதிகள் சுவைகள் குறித்த விவாதங்கள் பட்டிமன்றங்கள் ஆய்வரங்கங்கள் முதலானவற்றை அமைத்து தனது பாதையை விரிவாக்கி வெற்றி நடைபோட கவியுலகப் பூஞ்சோலையையும் அதன் நிறுவுநர் தலைவர் நெப்போலியன் அவர்களையும் மற்ற நிர்வாகிகளையும் வாழ்த்துகிறேன்.

இராம.வேல்முருகன்
M.Sc.,M.A.,M.L.I.S.,M.B.A.,B.Ed.,DYDW.,
வலங்கைமான் 612 804



# வாழ்த்து மலர்களைத் தூவுகிறோம்...

கவிக்கொரு களம் அமைத்து
காவியம் வரைந்த குழுமம்
கலையுணர்வு கை வந்தச்
சோலை இது உயர்வே...

ஆண்டுகள் மூன்று - மிக
அழகாக நிறைகையில்
அள்ளித்தந்தோம் வாழ்த்துகளை
அவனி போற்றும் புகழினை...

தையிலே தோன்றினாள்
மனதைப் பண்படுத்தினாள்
விதை ஒன்றைப் போட்டு
வீராப்புடன் நடையிட வைத்தாள்...

கவித்தாகம் கொண்ட
புவி வாழ்க் கவிஞரெல்லாம்
கை கோத்து வந்தோம்
உன் மடியில் தவழ...

நிறுவனர் மன்னரவர் நாமமாம்
தலைமை தியாக உணர்வது சூடுமாம்
தென்றலது செயல் திறம் கொண்டே
திறம்பட நடாத்தும் சோலை இதுவாம்

கவித்தேர் வலம் வர யாவரும்
மனதார இணைந்திடுவோம்
இன மத பேதமின்றிக் கவிச்
சோலை தனில் வாழ்ந்திடுவோம்...

வாழிய கவியுலகப் பூஞ்சோலை
காவிய ஏட்டில் தடம் பதித்தே
ஆண்டுகள் மூன்றல்ல மூவாயிரம்
அகவைகள் கொண்டே உயர்க...

சிவதர்ஷினி ராகவன்

# பூஞ்சோலையை வாழ்த்துகின்றேன்!



நீரின்றி அமையாத நெடுவுலகத்தில் நீநின்று ஆற்றும் கவிப்பணி நீண்டு செல்வது கண்டு நெஞ்சம் நெகிழ்கிறது. பூஞ்சோலையில் பூத்துக்குலுங்கும் பூக்கள் புது நறுமணம் வீசுகின்றன. ஒரத்தநாட்டின் உன்னத மைந்தர் நெப்போலியன் அவர்தம் கரம் பட்டதால் மலர்ச்சோலை மலர்ந்து பொலிவுகொண்டு விளங்குகிறது.

அத்தோடுபூஞ்சோலைக்குழுமத்தைசெவ்வனேவழிநடாத்திச் செல்லும் நெப்போலியன் கவியுள்ளத்தினையும், தலைவர் பாலதியாகராஜன் அவர்களையும், செயலாளர் தென்றல்கவி அவர்களையும், மதிப்புறு தலைவர் ஸ்ரீசக்தி அவர்களையும் நன்றி உணர்வோடு பாராட்டி உங்கள் உயரிய அர்ப்பணிப்பு காரணமாக வீறுநடைபோடும் பூஞ்சோலைக் குழுமத்தை வாழ்த்துகின்றேன்.

பூவுலகம் புத்தெழுச்சிப் பெறக் கவியுலகப் பூஞ்சோலை கால்தடங்களைப் பதித்துச் செல்கின்றமை மகிழ்ச்சி தருகிறது. ஆண்டுதோறும் ஆற்றும் கருமம் கண்டு மகிழ்வதோடு காலம் உள்ளவரை கவிப்பணிசெய்து வளர்ந்திட வாழ்த்துகிறேன்.

நன்றி

வளையூர் இளங்கவி

**பெ.புண்ணியராஜ்**



# தமிழ்த்தேர்
# கவியுலகப் பூஞ்சோலை

அன்னைத்தமிழை வணங்கி என் வாழ்த்துரையை எடுத்துரைக்கின்றேன்!

நாவினிக்கும் நற்றமிழை நலம்மிகுச் செறிவுடன் வளர்த்துக் கொண்டிருக்கும் நற்குழுவாம் முகநூலின் முத்திரைக் குழுமமாம் கவியுலகப் பூஞ்சோலை மூன்றாம் ஆண்டின் முகவரி காணும் இத்தருணத்தில் கவியுலகப் பூஞ்சோலையில் சிறு கவிப்பூவாக நானும் இருப்பதில் பெருமகிழ்வுக் கொள்கிறேன்.

மூன்று வருடங்களின் முன் தன் முதல்பயணத்தைக் கவிக்கென ஆரம்பித்த முகநூல் குழுமம் கவியுலகப் பூஞ்சோலையானது முன்னணிக் குழுமமாக முகநூலில் திகழ்ந்து கொண்டிருக்கிறது. இதற்கு என் முதல் வாழ்த்துகளுடன், ஏற்றம்மிகு ஒப்பில்லா நிறுவனர் திரு நெப்போலியன் அவர்களையும், தலைமைப்பண்பில் தன்நிகரில்லாத் தலைவர் திரு பாலதியாகராஜன் அவர்களையும், வயலோரத் தென்றலாகத் தமிழால் தழுவும் செயலாளர் திருமதி தென்றல் கவி அவர்களையும், மணம் கமழும் தமிழால் மனம் கவரும் மதிப்புறு தலைவர் திருமதி ஸ்ரீசக்தி அவர்களையும் இந்நூலின் வாழ்த்துரை வாயிலாக வாழ்த்துவதில் அகம்நிறை மகிழ்வு கொள்கிறேன்.

மேலும், கவியுலகப் பூஞ்சோலையில் கவிப் பூச்செண்டு களாகத் திகழும் ஆனந்த் உமேஷ், அனுகவி, செல்லமுத்து பெரியசாமி, தர்மா, கோகிலா கோமதி ஜெயக்குமார், செல்வக்குமார்

கதிர்காமநாதன், சோதி செல்லத்துரை, உஷாதேவி பார்த்தசாரதி, மயிலையூர் மோகன், சேகு, அ.க.பா. வெற்றிவேல் பாண்டியத்துரை, அருண் மயூறன், இதயம் விஜய், கவிச்சுடர் கல்யாண சுந்தரம், ரசி குணா, ராஜிலா ரிஜ்வானையும் வாழ்த்திக் கவிப்பூக்களைத் தினமும் தூவிச்செல்லும் கவிஞர்களையும் நிர்வாகிகளில் ஒருவராக இருந்து வாழ்த்தி மகிழ்கின்றேன்.

கவிப்பூக்களால் அலங்கரித்த தமிழ்த்தேர் கவியுலகப் பூஞ்சோலையில் காலமெல்லாம் கவிபாடி ஓடி வரக் கனிவான என் வாழ்த்துகளைக் கனியாகத் தந்து மகிழ்கின்றேன்.

நன்றி.

கீர்த்தி கிருஷ்



# பண்பாடு மாறாமல் வாழ்க!

தமிழுக்கு அமுதென்று பேர்_ அந்தத்
தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

எனப் பாடிய பாரதிதாசனின் வரியொற்றி, கனித்தமிழில் தோன்றிய நல் இலக்கியங்களின் சுவை உணர்ந்தவர்கள் தமிழர்கள்.

சுவை புதிது; பொருள் புதிது; வளம் புதிது;
சொல் புதிது ; சோதி மிக்க
நவ கவிதை எந்நாளும் அழியாத
மகா கவிதை...

என்ற பாரதியின் புதுக்கவிதையெனும் போர்வாள் முரட்டுத் தோல் உரித்த பலாச்சுளையாய் இலக்கண உறையிலிருந்து உருவப் பட்டுள்ளது.

இலக்கிய வளங்கொழிக்கும் மொழிகளின் விழிகளாய் பல கவிஞர்கள் ஒளியூட்டி வருகிறார்கள்.

அவ்வகையில் அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியின் அங்கமாய் முகநூலிலும் பைந்தமிழ் பைய நடையிட, ஞாலம் ஆள விரும்பிய நெப்போலியனாய், தமிழன்னைக்குக் ‘கவியுலகப் பூஞ்சோலை’ எனும் குடையினாற் உலகத் தமிழர்களையே ஒருங்கிணைத்துப் பிடித்துள்ளார் நிறுவனர் நெப்போலியன்.

தினக்கவிதை, குறுங்கவிதை, கிராமியக் கவிதை, பாடல்கள், ஹைக்கூ எனப் பன்முகத்தான் நாள் தோறும் விழாக் கோலமாய் பீடு நடையிட்டு வருகிறது.

பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன், வாலி போன்ற மகா கவிகளை நினைவு கூரும் விதமாக இவர்கள் அளிக்கும் சான்றிதழ் பாராட்டத் தக்கது.

எண்ணங்களை எழுதுகோலாக்கி, வண்ணமிகு தமிழின் வனப்பை வரைந்திடும் கவிஞர்களை ஆற்றுப்படுத்த நற் தலைமையாய் பாலதியாகராசனும், ஸ்ரீசக்தியும், செயல் வடிவாக்க சுழலும் தென்றல் கவியும், நனி சிறந்த நடுவர்களுமாய், பல கவிமலர்கள் பூத்துக் குலுங்கும் கவிச்சோலையாய்க் காட்சியாகிறது.

'மெல்லத்தமிழ் இனிச்சாகும்' என வேதனைப் பட்டோர்க்கு 'தமிழ் அழியா வரம் பெற்ற நன்மொழி' என உணர்த்தும் விதமாக வையத்து நாடுகளிலெல்லாம் முகநூல் மூலமாக, இத்தகு கவிதைக் குழுக்கள் மூலமாக அரியாசனத்தில் இறுமாப்பாய் வீற்றுள்ளது.

எண்ணங்களில்
வண்ணங்கள் பூசி
பண் பாடி
பண்பாடு மாறாமல்
தமிழன்னைக்குச்
சொன்மாலை சூட்டிடும்
தமிழ்க் கவிகள் அனைவர்க்கும்
வாழ்த்துகள்..!

கவிஞர். நளினா கணேசன்
ஈரோடு.



# புகழ் சூட வாழ்த்துகிறேன்..!

காற்றாகக் கலந்தோடும் கவித் தென்றலே
கடல் அலையாய் ஓசையிடும் சங்கோசையே
கவியாயிரம் சங்கமிக்கும் தமிழ்த்தாய் மடியே
இனிமை தமிழ்ப்பாடும் கவியோடையே
கவிகள் நிழலாடும்
பசும் தென்றலே
சுவைகள் தேனூட்டும்
செந்தேன் தமிழே....
இரண்டு ஆண்டு விழா
இனிதே ருசித்து
மூன்றாமாண்டு முத்தமிழைக் காணவிருக்கும்
கவியுலகப் பூஞ்சோலையே
பூத்துக் குலுங்கும்
வண்ணச் சோலையே
வானவில்லாய் அழகாகட்டும்
கவியுலகப் பூஞ்சோலையே...
நான் பயணிக்கும் தமிழ் ரதமாகியக்
கவியுலகப் பூஞ்சோலை சீரோடும்
சிறப்போடும் புகழ் சூட
வாழ்த்துகிறேன்..!

ரஞ்சனி சந்திரமோகன்
ஜெர்மன்..

# கவியுலகப் பூஞ்சோலையை வாழ்த்துவோம் வா!



கவியுலகப் பூஞ்சோலை குழுமம் நல்ல
கவிதைகளைப் பூக்கவைக்கும் முகநூல் காவாம்
புவியெங்கும் இருப்போரைப் புனைய வைத்துப்
புதுவுறவில் இணையவைக்கும் புதுமைக் காவாம்
நவில்கின்ற புதுக்கவிதை மரபுப் பாவை
நாளெல்லாம் வளர்க்கின்ற அருமைக் காவாம்
குவிகின்ற கவிதைகளை ஆய்வு செய்து
குலைவாழை போல்விருதை வழங்கும் காவாம்!

தினமொருநற் தலைப்பினிலே கவிதைப் போட்டி
தித்திக்கும் இசையினிலே பாடல் போட்டி
மனம்மயக்கும் படத்திற்குக் குறும்பா போட்டி
மண்வாசக் கிராமியத்துக் கவிதைப் போட்டி
எனநாளும் வகைவகையாய் போட்டி வைத்தே
எல்லோரும் எழுதுதற்கு வாய்ப்ப ளித்துக்
கனவுகளை கற்பனையை வடிக்க வைத்துக்
கனிச்சுவையாய்க் கவிதைகளை வழங்கும் காவாம்!

நெப்போலி யனென்கின்ற நிறுவ னர்தாம்
நேர்வழியில் குழுநடத்தத் தியாக ராசன்
செப்பரிய தலைமையுடன் குழுவி யக்கச்
செயலாளர் தென்றல்கவி நிர்வ கிக்க
எப்போதும் திருசக்தி கண்கா ணிக்க
எழிலாகக் கவியுலகப் பூஞ்சோ லைதாம்
இப்போது மூன்றாண்டில் காலை வைத்தே
இனியவிழா நடத்துவதை வாழ்த்து வோம்வா!

பாவலர் கருமலைத்தமிழாழன்



# வளர்தமிழின் பாவாலே தினமுன்னை சேவிப்பேன்!

சோலை யெல்லாம் கவிதையாகப் பூத்திருக்க
சொல் புழங்கும் பாவலர்கள் உலவிடவே
கூர்தீட்டும் சாணையெனக் குவிந்தபல போட்டிகளால்
சீர்பரப்பும் தளமதுவாம் கவியுலகப் பூஞ்சோலையே !

வீரம்விளை மண்ணில்நிலை ஒரத்தநாடு புகழ்
சூரரவர் பேர்விளங்கும் சுந்தரராம் நெப்போலியனும்
நிறுவியதிச் சோலையிலே தவழ்பால தியாகராஜன்
நிறுவனத்தின் தலைவரெனப் போற்றிடடித் தமிழேநீ !

தவழ்பிள்ளைக் கொருவழிகாட்டி தகைசான்ற தொருதலைவர்
வளர்பிள்ளை பலர்கவியாய் வளர்த்தெடுக்கும் பணியினிலே
சுடர்விளக்குத் தூண்டுகோலாய்ச் சுடர்விளங்கும் ஸ்ரீசக்தி
புகழ்பாடி வாழ்த்துகிறேன் பூம்பாவைத் தமிழாலே !

புழுங்கியதோர் இடத்தினிலே புத்துணர்வு ஊட்டுதற்குப்
புலம்பெயர்ந்த காற்றதுவும் புதுத்தென்றல் போல்வருடச்
செயலனைத்தும் பொறுப்பேற்றுச் சீர்படவே நடத்திடுமிச்
சபைச்செயலர் தென்றல்கவி வாழியவே பல்லாண்டு !

எத்தளத்தில் கவிபடைத்தும் இத்தளமென் தாய்வீடாய்
நித்திலமே போற்றுமிவர் நெஞ்சார்ந்த கவிப்பணியே
சத்தியமாய் ஈடுபல இருந்தாலும் சேவிப்பேன்
நித்தமுமாய் வளர்தமிழின் பாவாலே தினமுன்னை !

கு. கமலசரஸ்வதி

# கவியுலகப் பூஞ்சோலை வெல்க!



கவியுலகப் பூஞ்சோலை காலம் உவக்கப்
புவியுலவும் நற்பணி பூக்க! - செவிகுலவும்
சீர்த்தமிழைப் பாடிச் சிறப்புறுக! வாழ்த்துகிறேன்
தார்மணப் பாக்களைத் தந்து!
...................

ஆற்றல்மிகு அருங்கவிகள் பலரிருக்கத் தமிழர்
போற்றிடவே பலருமில்லை இதழுலகில்! நம்மின்
நாட்டிலுள்ள நற்கவிஞர் மகிழ்ந்திங்குப் பாடி
நலமுறவே பூஞ்சோலை பொலிந்தாடக் கண்டேன்!

எங்குற்றால் தமிழ்கொழிக்கும் என்றெண்ணிப் பார்த்தே
இங்குவந்து சேர்ந்திட்டக் கவிக்குயில்கள் வாழி!
கவியுலகப் பூஞ்சோலை பூத்துமணம் வீசப்
புவிபோற்றப் புதுகவிகள் புனைந்தார் வாழி!

ஆற்றல்மிகு மனம்கொண்ட நன்மனத்தார் இங்குப்
பாட்டோங்கப் போட்டிபல நடத்துகின்றார் நன்றே!
நாட்டமுடன் சான்றிதழும் பரிசுகளும் நல்கி
நாற்றிசையும் பரப்புகிறார் தமிழின் சீரே!

காற்றினிலே தவழ்ந்துவரும் பாட்டினையும் கேட்டுப்
போற்றிமனம் மகிழ்ந்தாடி மூன்றாண்டாய் நாளும்
ஏற்றபணி செய்கின்றார் தாய்மொழியைக் காத்து!
சாற்றுகிறேன் கவிமாலை பல்லாண்டு வாழி!

ஆய்ந்தறிந்து சொல்கின்றேன் நானும் சேர்ந்து
தாய்மொழியில் புதுமைசெயும் புதியவர்கள் வாழ்க!
வாய்மணக்க வாழ்த்துகிறேன்! வரலாற்றைப் படைத்து
வாய்மையொளிர் கவியுலகப் பூஞ்சோலை வெல்க!

தமிழ்நெஞ்சம் அமின்

ஆசிரியர் "தமிழ்நெஞ்சம்" & President of FACT, France



# திறங்காத்துச் செம்மொழியின் உரங்காத்து வாழ்க...

பொன்பூத்தச் செந்தாழைப் புதர் மேவிப்
புனலாடிப் பொலிந்த தென்றல்
மின்பூத்தக் கொடிமுல்லை மணந்தோய்ந்து
மென்மெலவே கழிமுகத்தின்
நின்றாடிப் புலால்நுகர்ந்து நெடிதுயர்ந்த
பனைதென்னை நெற்றிநீவி
முன்றிலிலே சாளரத்தின் முன்கதவைத்
தட்டுகிற எங்கள் தஞ்சை.

வயலாடும் செழும்பசுமை வானளந்த
திருக்கோவில் வான் வழங்கும்
பெயலார்ந்த புல்நுனியும் பெருமிதத்தால்
கதிர்பொலிந்து பிறங்கித் தோன்ற
இயலிசையும் கலைநலமும்
எழில் வளமும் செந்தமிழும்
ஏற்றங்கொண்ட செயல் மறவர்
புகழ்பாடும் தீஞ்சுவைத்தேன்
தமிழ் பாடும் திறமென் சொல்வேன்.

முதுபுலவர் அணிவரிசை முன்னிற்க
இளங்கவிஞர் மொய்த்து நிற்கும்
புதியவகை தமிழ்முற்றம்
கவியுலகப் பூஞ்சோலைப்
பொலிதல் கண்டே இதுவலவோ

எஞ்ஞான்றும் இளந்தமிழ்க்குக்
காலத்தால் இனிய பொற்பூண்
பதிவிடுக முகநூலில் படைப்பாளர்
பலர்வருக... பண்கள் செய்க

என்றழைக்கும் அணியணியாய்
இளங்கவிஞர் நடையிடுநல் இராசபாட்டை
மன்றமிது நனிவாழ்க
நிறுவனர் நெப்போலியனும் மகிழ்ந்துவாழ்க
என்றுமுள தென்றமிழால்
தியாகராசன் ஸ்ரீசக்தி யிவர்களோடு
தென்றல் கவி யுள்ளிட்டச்
சீரார்ந்த இளம்புலவர்
செவ்வன் வாழ்க!
பழுதற்ற தமிழ் படைப்பீர்
சமூகநலம் காப்பதற்கும்
பரிவு கொள்வீர்
எழுதரிய இயற்கையிலே
உளந்தோய்வீர்
அன்புநெறி இயைந்ததாக
வழிவழியாம் மரபார்ந்து
புதியவகைச் சிந்தனைகள் படைப்பீர்
மேலும் மொழிப்புலமைத்
திறங்காத்துச் செம்மொழியின்
உரங்காத்து முயல்க வாழ்க...

கவிமுகில்

அன்புவல்லி தங்கவேலனார்

பட்டுக்கோட்டை.



# வானுரச வளரட்டும் கவிப்பூஞ் சோலை!

கவியுலகப் பூஞ்சோலை மணத்தை யள்ளக்
காற்றுவந்து காத்திருக்கும்! தேன்கு ழைத்துச்
செவிநுகரக் கவிதைகளில் சேர்த்து வைக்கும்!
செந்தமிழ்க்கே ஆசைவரச் செய்தி ருக்கும்!
குவித்துவைத்த வைரம்போல் வரிகி டைக்கும்!
குறையாமல் அள்ளிவைத்து விருந்த ளிக்கும்!
கவிழ்த்துவைத்தத் தேனமுதக் கலயம் கொட்டும்
கவிதையெலாம் சுவைப்போரின் ஆயுள் கூட்டும்!

நாள்வாரம் போதாமல் மாதந் தோறும்
நற்கவிதைப் போட்டிவைத்து மகுடம் சூட்டி
வாள்முனைக்குக் கூர்தீட்டி தமிழைக்காக்க
வடிவமைப்புச் செய்கின்றார் !அடடா இந்தத்
தூள்கிளப்பும் தமிழ்த்தொண்டு தொடர்ந்து செய்யத்
துவளாத கூட்டணிதான் அமைத்துள் ளார்கள்!
தாள்பணிந்தும் தமிழுயர்த்த உழைப்போர் தம்மின்
தொண்டுள்ளம் நான்வியந்தேன் ! வாழ்த்துகின்றேன்!

ஒரத்தநாடு நெப்போலியன் தியாக ராசன்
உழைக்கின்ற தென்றல்கவி சக்தி யோடும்
உரத்துவரும் சிந்தனையின் ஊற்றாய் வாழும்
உயர்கவிஞர்க் குழுவாழ்க! அமைப்பின் மூலம்
வரத்துக்குக் காத்திருத்தல் வாழ்க்கை யல்ல!
வளர்தொண்டே வாழ்க்கையென வாழும் பேறு
வரப்பெற்றோர் அனைவருமே வணங்கத் தக்கோர்!
வணங்குவோம் தமிழ்த்தொண்டை! வாழ்க! வாழ்க!

மூன்றினையெம் முப்பத்து ஐந்து வாழ்த்தும்!
முன்றில்கள் அணிலாட மகிழ்ந்தி ருக்கும்!
சான்றுகளால் தானெழும்பும் சரித்தி ரங்கள்
சந்தணம்போல் மணம்வீச, சரித்தி ரங்கள்
ஊன்றிவைத்த விதைமுளைத்துத் தோப்பாய் மாற,
ஊர்வாழ கனிகொடுக்க, குடைபி டிக்க,
வானுரச வளரட்டும் கவிப்பூஞ் சோலை!
வசந்தராசன் வாழ்த்துகிறேன் வாழ்க! வெல்க!

வாழ்த்துகளுடன்,


## கவிக்கோ துரை வசந்தராசன்

அமைப்பாளர், பண்ணைத்தமிழ்ச்சங்கம்
சென்னை 600051



# கவியுலகப் பூஞ்சோலை வாழ்க!

முகநூல் தளத்தை முறையாகப் பயன்படுத்திக்கொள்பவர்கள் தமிழர்கள் என்று சொன்னால் மிகையாகாது. அதற்கு எடுத்துக் காட்டாக சில முகநூல் குழுமங்களை வரிசைப்படுத்தலாம். நிலாமுற்றம் (கவிதைகளுக்கான தேடல்) மற்றும் கவியுலகப் பூஞ்சோலை, ஊ..ழ..ல...ள போன்றவையே முதலிடத்தில் இருக்கின்ற குழுமங்கள். கவியுலகப் பூஞ்சோலை இரண்டு ஆண்டு விழாக்களை வெற்றிகரமாக நடத்தி முடித்து இதோ மூன்றாவது ஆண்டுவிழாவை இரண்டு நாட்கள் திருவிழா போல் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். சென்னையில் 100 கவிஞர்கள் பங்கேற்றக் கவியரங்கத்தை நடத்திய அனுபவத்தை வைத்து இரண்டு நாட்களிலும் சுமார் 200 கவிஞர்களைக் கவிதைப் பாட வைக்க இருக்கிறார்கள். ஒவ்வொரு விழாவையும் நடத்துவதில் எவ்வளவு சிரமங்கள் வரும் என்பதில் அனுபவத்தில் உணர்ந்திருக்கிறேன். சிக்கனத்தைக் கடைப்பிடித்து விழாவைச் சிறப்பாக்குங்கள். கவியுலகப் பூஞ்சோலை வளர்ச்சியில் தொண்டாற்றிய முன்னாள் இந்நாள் பொறுப்பாளர்கள். கவியுலகப் பூஞ்சோலை நிறுவனர் தம்பி நெப்போலியன், தலைவர் தம்பி பாலா, செயலாளர் தங்கை தென்றல் கவி ஆகியோருக்கும் வாழ்த்துகள். மூன்றாம் ஆண்டுவிழாக் காணும் கவியுலகப் பூஞ்சோலை குழுமத்திற்கு என் வாழ்த்துகளையும் நான் சார்ந்துள்ள நிலாமுற்றம் நிர்வாகக்குழுவின் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாழ்க தமிழ்

நேசமுடன்

**முத்துப்பேட்டை மாறன்**

நிறுவனர் ''நிலாமுற்றம்'' முகநூல் குழுமம்

# நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்



நினைவுகள் நிஜமாக்குவதில் நிஜம்தானே! ‘‘கவியுலகப் பூஞ்சோலை’’ வித்தியாசமான வார்த்தை. முகநூல் சரித்திரத்தில் புகழ் பெறும் வார்த்தைகளாக மாறப் போகிறது என்று நினைத்தாலே மிகவும் பெருமையாக உள்ளது.

பூஞ்சோலை என்றால் யாருக்குதான் பிடிக்காது!. பூஞ்சோலை யில் கவியுலகமா? என்று நினைக்கத் தோன்றும். ஆனால் நடத்திக் காட்ட முடியுமா? என்று மனதில் கேள்வி எழும். ஆனால் நிச்சயமாக நடக்கும் என்று உடைத்துக் காட்டி இருக்கிறது ‘‘கவியுலகப் பூஞ்சோலை’’ குழுமம். மேலும், தளத்தில் தினம் ஒரு போட்டி வைத்து வெற்றியாளர்களுக்குச் சான்றிதழ் கொடுத்துக் கௌரவிக்கிறது. அது மட்டுமா? திறமைமிக்க நடுவர்கள் கவிதைகளைச் சீர்தூக்கிப் பார்த்துத் தேர்வு செய்கிறார்கள்.

வெற்றி பெற்றவர்களுக்கு வித்தியாசமான விருது வழங்குகிறார் கள். அதுவும் எப்படி தெரியுமா? பாரதியார் விருது, பாரதிதாசன் விருது, கண்ணதாசன் விருது, பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் விருது, நம்மாழ்வார் விருது, கவிஇமயம் விருது, மேலும் கவிச்சுடர் விருது என்று அள்ள அள்ளக் குறையாத. விருது வழங்கி கவிஞர்களைக் கௌரவிக்கிறார்கள். “கவியுலகப் பூஞ்சோலை” உலகளவில் சாதனை புரிய வெகுதூரம் இல்லை.

“கவியுலகப் பூஞ்சோலை’’யின் நிறுவனர் மதிப்பிற்குரிய திரு. ஒரத்தநாடு நெப்போலியன் அவர்களுக்கும் மற்றும் மற்ற நிர்வாகிகளுக்கும் நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துகள். நன்றி.

சுகன்யா நந்தகுமார்



# இலக்கியத்தின் வெற்றியே சமுதாய மாற்றம்

செந்தமிழில் கொண்ட தணியாத்தாகம், பைந்தமிழிருக்கும் இடமெல்லாம் என்னுயிரும், உணர்வுகளும் ஒன்றாகிக் கலந்திருக்கும். அந்த வகையில் மூன்று ஆண்டுகளாகக் கவியுலகில் பூஞ்சோலை அமைத்துக் கவிப்பூக்களை உருவாக்கியப் பெருமை கவியுலகப் பூஞ்சோலைக் குழுமத்திற்கு உரித்தாகுகிறது.

ஒவ்வொரு கால கட்டங்களையும் நெறிபடுத்திச் செல்வதில் இலக்கியங்கள் பெரிதும் பங்களிப்பு செய்கின்றன. ஒரு கால கட்டத்தில் தோல்வியும், அடுத்து வருகின்ற கால கட்டங்களில் எழுச்சியும், அக்கால கட்டங்களில் தோன்றுகின்ற இலக்கியங்களுக்கு அடித்தளமாக அமைந்து விடுகின்றன.

தற்கால சமுதாயத்தின் தேவை, சமுதாய மாற்றம், இந்த சமுதாய மாற்றத்தை இலக்கியத்தின் ஊடாகச் செய்யமுடியும். இத்தகையச் சேவையில் இன்று கவியுலப் பூஞ்சோலை முன்னிற்பதைப் பெருமை யாகச் சொல்லலாம்.

இக்குழுமத்தின் சேவைகள் மென்மேலும் தொடர்ந்து சிகரம் தொட வாழ்த்துகள்!


அன்பின் நல்லூரான் **வ. ஜசிந்தன்**
நதியோர நாணல்கள் இலக்கிய மன்றம்
நிறுவுனர் மற்றும் செயற்குழுத் தலைவர்
யாழ்ப்பாணம், இலங்கை

# பல்லாண்டு காலம் நீடூழிவாழ்க!



உலகெலாம் வலம் வந்து வாழும்
அனைத்துக் கவிஞர்களை ஒன்றுதிரட்டி
அழகான குழுமம் அமைத்துக்
கவியுலகப் பூஞ்சோலையென
அழகான பெயரிட்டுக் கவிதைகள்
கிராமிய மணங்கமழும் கவிதைகள்
கவிஞர்களைப் பெருமையோடு
வாலிசான்றிதழ் கண்ணதாசன் சான்றிதழ்
பாரதியார் சான்றிதழ் எனத் தயார்பண்ணி
விருது வழங்கிக் கௌரவித்து மகிழ்வித்து
முகம் தெரியாத நண்பர்களின் கவிதைகளை
முகம் காட்டி வாழ்த்துகள் தெரிவித்துப்
பாராட்டிக் கவிஞரெனப் பட்டங்கள் பல தந்தக்
கவியுலகப் பூஞ்சோலை குழுமத்தினரை
வாழ்த்தி வணங்குகிறேன்,,,
மென்மேலும் பொலிவோடு
செழித்து வளர்ந்திடவே
செந்தமிழை வாழ்த்துவோம்,,
கவியுலகப் பூஞ்சோலைக் குழுமத்தினரைப்
பல்லாண்டு காலம் நீடூழிவாழ்க
வாழ்க என்று வாழ்த்துகின்றேன் ,,,!

புவனா சற்குணம்



# கவிஞர்கள் களிப்புடன் உலவும் பூஞ்சோலை

கவிதைகள் வரையும்
கவிஞர்கள் களிப்புடன்
உலவும் பூஞ்சோலைக்
கவி மலரும் தமிழ் மணமும் காற்றில்
கலந்து பரவிடும் தமிழ்ச்சோலைச்
சின்ன கவிதைகளும்
வண்ணக் கவிதைகளும்
எண்ணத்தில் வடிவமைத்து
சிங்காரச் சொல்லமைத்து
சோலையெங்கும் சிற்பங்களாய்
வடிவமைத்து உள்ளே நுழைபவர்கள்
உவகையுடன் ரசிக்க வைப்பார்!

மயக்கும் தமிழ் மணத்தில்
மயங்கியே மகிழ்ந்திடுவர் !
தமிழன்னைப் புகழ் தன்னைத்
தரணியெங்கும்  பரப்பிடவே
ஓயாமல் பணிசெய்தே
கவியுலகப் பூஞ்சோலைச்
செழித்து வளர்ந்திடவே
தமிழினமும் தமிழ்மொழியும்
தரணியிலே உயர்ந்திடவே
தமிழன்னைத் தாள்படிந்து
தயவுடனே வேண்டுகிறேன்!

ரேணுகா சுந்தரம்

# ஒற்றுமை காப்பது மிகச் சிறப்பு!



கவியுலகப் பூஞ்சோலைக் குழுமத்தில் நான் உள்நுழைந்து நான்கைந்து மாதங்களே ஆன நிலையில், எண்ணற்றப் பல குழுமத்தின் ஊடே மிகச் சிறப்பாய் நம் குழுமம் செயல்படுகிறது!

நிறுவனரும் நிர்வாகிகளும் ஒற்றுமை காப்பது மிகச் சிறப்பு

மண்மயக்கும் கிராமியக் கவிதைகள் வித்தியாச சிந்தனை யாய் வாலி, கண்ணதாசன், பாரதிதாசன் என வெவ்வேறு வடிவங்களில் தினசரி கவிதைப் போட்டியில் சான்றிதழ் அளித்து உற்சாகப்படுத்துவது மிக அருமை. திறமையான நடுவர்கள் அமைத்துச் சிறப்பான, சீரிய முறையில் பின்னூட்டம் அளித்து நடுவர் பணியைச் செய்வதும் மிகச் சிறப்பாகும்.

மூன்றாம் ஆண்டு விழாச் சீரும் சிறப்புமாய் வெற்றி பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

**கி.சீனிவாசன் தமிழ்ப்பிரியன்**



# தேனீக்கள் நாடும் பூஞ்சோலை!

கவியுலகத்தில் தேனும் பாலும் தெவிட்டாமல் கிடைக்கும் குழுமம் இந்தக் கவியுலகப் பூஞ்சோலை எனலாம். நிறுவனர் திரு.நெப்போலியன் மற்றும் தலைவர் திரு.பாலதியாகராஜன், செயலாளர் திருமதி.தென்றல்கவி மற்றும் மதிப்புறு தலைவர் ஸ்ரீசக்தி அவர்கள் போன்றோர்களால் சீரும் சிறப்புமாய் இயங்கி வருகிறது. தினக்கவிதைப் போட்டி திகட்டாத தலைப்பைக் கொண்டு சிந்தனையைத் தூண்டும் விதம் நடந்திடும். கிராமியக் கவிதைப் போட்டி மற்றும் ஹைக்கூ கவிதைப் போட்டி இது போன்றஎண்ணற்றபோட்டிகள்நடப்பதால்கவிதைஎழுதக்கற்றுக் கொள்பவருக்கு வரப்பிரசாதமாகவும் கற்றுத் தேர்ந்தவர்களுக்கு ஊன்றுகோலாகவும் இருக்கிறதென உறுதியாகக் கூற முடியும். கவித்திறன் வாய்ந்த நடுவர்களால் கவித்தேர்வு நடைபெற்று அழகிய சான்றிதழ் முகநூலில் வெளியிடப் படுகிறது.

கவிவானில்பறக்கநினைக்கும்இறக்கைமுளைத்தசிட்டுகள் எல்லாம் சுதந்திரமாய்ப் பறக்க இங்கே படையெடுக்கலாம்.தேன் எடுக்க வண்டுகள் நாடும் பூஞ்சோலையை! அதுபோல் கவித்தேன் வடிக்க கவிஞர்கள் நாடுவது கவியுலகப் பூஞ்சோலையை!

பலப்பலக் கவிஞர்களை உருவாக்கி என்றும் மணம் வீசும் சோலையாக இந்தக் கவியுலகப் பூஞ்சோலை இருக்கும். இதில் நானும் சிறு பூவாய் பயணிக்கிறேன் என்பதில் ஆனந்தம் அடைகிறேன். இக்குழுமம் மென்மேலும் வளர்ந்து கவிஞர்களைப் பட்டை தீட்டும் என்பதில் பெருமிதம் கொள்வோம்.

குமார் சுப்பையா

# செழித்து வளர வாழ்த்துகிறேன்!



தமிழ் மணக்கும் ‘ஒரத்தநாடு’ மண்ணிலே,
தமிழாய் வாழும் கவிஞர் நெப்போலியன் நிறுவியதாம்,
கவிதை மணம் பரப்பும் கவியுலகப் பூஞ்சோலை,
கவித்துவம் நிறைந்த கவிஞர் பால தியாகராஜன்
சீரிய தலைமையிலும்,
பொறுப்பை விருப்பத்துடன் செயல்படுத்தும்
‘தென்றல்கவி’யும்
கவியுலகப் பூஞ்சோலையில் கவிதைப்
பூக்களைப் பூக்க வைக்கும் விதைகளாம்!

கவிதைகள் வலம் வரும் பூஞ்சோலை,
கவிஞர்கள் புடைசூழும் கவியுலகப் பூஞ்சோலை,
தமிழ் மணம் பூக்கும் பூஞ்சோலை
தமிழைக் கொண்டாடும் கவியுலகப் பூஞ்சோலை,
கவிதைகள் படைக்கும் பூஞ்சோலை புது
கவிஞர்களைப் படைக்கும் கவியுலகப் பூஞ்சோலை,
கவிஞர்களைப் போற்றி வாழ்த்திடும் பூஞ்சோலை,
தமிழ்க் கவிஞர்கள் வாழ்த்தும் கவியுலகப் பூஞ்சோலை.
பூசல்கள் இல்லாத பூஞ்சோலை இது
புதியவர்களை வரவேற்கும் கவியுலகப் பூஞ்சோலை,
மூன்றாம் ஆண்டு விழாவைக் கொண்டாடும் பூஞ்சோலை,
மூவுலகிலும் தமிழ் பரப்பும் கவியுலகப் பூஞ்சோலை,
செழித்து வளர்ந்து தரணியில் சிறந்திடவே
வாழ்த்துகிறேன்...!

பட்டுக்கோட்டை பாலு



# சிந்தை இனித்திட வாழ்த்துகிறேன்.

பூத்திருக்கும் மலர்களில் இருந்து தேனை வடித்தெடுத்துத் தேன் கூட்டில் சேகரிக்கும் தேனீக்கள் போலக் குழும நிறுவனர் சகோ. நெப்போலியன் சீரிய தலைமையின் கீழ் தலைவர் சகோ பால தியாகராஜன், செயலாளர் சகோ. தென்றல் கவி மற்றும் மதிப்புறு தலைவர் சகோ. ஸ்ரீசக்தி ஆகியோர்கள் அடங்கியே சீரிய தலைமையின் கீழ் எண்ணற்ற தேனீக்கள் நிர்வாகிகளாய் இருந்து சிறப்பாக இந்தக் குழுவை வழிநடத்திச் செல்கிறார்கள். அனைவருக்கும் என் அன்பு வாழ்த்துகள்.

முகநூல் குழுமங்களில் இதுவும் ஒன்றென எண்ண வைக்காமல் தங்களுக்கெனத் தனிப்பாதை அமைத்து நடைபோடுகிற சில குழுக்களில் கவியுலகப் பூஞ்சோலை தன்னிகரற்றது.

இரண்டு வருடங்களுக்கு முன்பு தைத்திங்களில் தடம்பதிக்க தன் முதல் அடியை எடுத்து வாய்ந்த கவியுலகப் பூஞ்சோலை குழு சிறப்பான பல நற்செயல்களை முன்னெடுத்துத் தற்போது மூன்றாம் ஆண்டில் அடியெடுத்து வைப்பது மிகவும் சிறப்புக்குரிய ஒன்றாகும்.

இந்தப் பெருமை எல்லாம் அதன் நிர்வாகிகள் அனைவருக்கும் சேரும். இந்தக் குழுவில் அடியேனும் ஒரு உறுப்பினராக இருப்பதில் மகிழ்வு கொள்கிறேன். தமிழே தாயே மனதில் நீயே நின்மணிமகுடம் மிளிரும் வைரங்களில் ஒன்றெனவே ஒளிருதே கவியுலகப் பூஞ்சோலை சிறப்புகள் பலபூண்டு வையத்தில் சிறக்க உன்னில் சிறக்க உன்னையும் சிறப்பிக்க சிந்தை இனித்திட உளமார வாழ்த்துகிறேன்..

சங்கர் நீதிமாணிக்கம்

# பூஞ்சோலையின் பூக்களது
# நெகிழிப் பூக்களல்ல...



தமிழ் மணக்கும் 'ஒரத்தநாடு' மண்ணிலே,
முத்தானதோர் பயணம் மேற்கொண்டோம்.
மூன்றாம் ஆண்டிலே அடியெடுத்து வைத்தோம்.
முகநூலில் கவிபடைத்து அகம் மகிழ்ந்தோம்.
முக்கனியின் சுவையதனை ரசித்திருந்தோம்.
அன்றோ சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தார்.
இன்றோ "கவியுலகப் பூஞ்சோலை"
கவிதையிலே  உயர் தமிழ் வளர்த்தோம்.

மூத்த மொழியதனைக் கண்முன் நிறுத்தி.
முகநூலில் சிறப்பித்துத் தந்து கொண்டிருக்கும். .
நம் "கவியுலகப் பூஞ்சோலை" என்றென்றும்
நறுமணம் பரப்பி  பூமியிலே பூங்காற்றாய்..
நித்தமும் புதுப் பொலிவுடனே திகழ்ந்திடவே.
புகழென்றும் ஓங்கட்டும் என்று உளமார
வாழ்த்துகின்றேன்.

தரணி போற்றும் தஞ்சையிலே விளைந்த
நல்ல பொன்மணியாம்...எங்கள் கவிச்சுடரே..
தமிழ் மொழியதனைக் கவிதையிலும்..
பொங்கும் பாடலிலும் சிறப்பித்து வழிநடத்துபவரே.
புகழ்ச்சிதனை விரும்பாத புன்னகை வேந்தனே.
புத்தம்புது பரிணாமம் படைத்தீரே கவிதனிலே.

மொழியதனை உயிராக..விடாது
இயங்க வைத்துக் கொண்டிருக்கும் ஐயா.
ஒரத்தநாடு நெப்போலியன் அவர்களுக்கும்.
இனிதான வணக்கமும் நல்வாழ்த்துகளும்.

ஐயன் வள்ளுவனை அடையாளச் சின்னமாக இட்டு...
மூன்றாம் அகவையிலே அடியெடுத்து வைத்திருக்க.
ஐயம் இன்றி உரைத்திடுவேன்..கவியுலகம்.
அகிலம்போற்றச் சிறக்கும் என்று..
பூஞ்சோலையின் பூக்களது நெகிழிப் பூக்களல்ல...
வாசம் வீசும் நறுமலராய் நாளும் பூக்கும் மலரன்றோ.

படைப்பவர்களின் சிந்தைதனை வெளிக்கொணர...
குறுங்கவிதைக்கும் பஞ்சமில்லை.
தினக்கவிதைக்கும் குறைவில்லை.
மரபுதனையும் கொண்டிருந்தோம்.
''ஹைக்கூ'' வும் படைத்திருந்தோம்..
நவீனக் கவிதைகள் வடித்திருந்தோம்.
மண்வாசம் வீசும் கிராமியக் கவியும் நுகர்ந்திருந்தோம்.
தினம் பல புதுமைகள் படைத்திருந்து..
கவிஞர்.. கவித்திறனதை உலகிற்கு எடுத்தியம்பும்..
திறன் பல கொண்டிருக்கும் கவியுலகப் பூஞ்சோலை
திக்கெட்டும் சிறக்கட்டும்.
வாழ்த்துகிறேன். வணங்குகிறேன்...

சுமி முருகன்

# நன்மதிப்பினைப் பெற்றக் குழுமாக வாழ்க!



கவியுலகப் பூஞ்சோலை குழுமமானது ஒவ்வொரு வருடமும் புது முயற்சியில் களமிறங்கி வெற்றிக் கண்டு வருகிறது கடந்த வருடமும் (2018) ஆண்டு விழாவில் பல்வேறு திசைகளிலிலும் இருந்து கவிஞர்களை ஒன்றிணைத்து 10 நூல்களை வெளியிட்டு கவிஞர்களின் கவித்திறமையினை உலகிற்கு விருந்தாக்கி நன்மதிப்பினைப் பெற்றக் குழுமாக தலைநிமிர்ந்து நிற்கிறது அது மட்டுமல்லாது வாழ்வில் வரும் தடைகளை எவ்வாறு தகர்த்தெறிய வேண்டுமென்பதை நிறுவனர் ஒரத்தநாடு நெப்போலியன் அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள முடியும். அப்படியோர் தலைமையின் கீழ் இக்குழுமம் 3ஆம் ஆண்டை எய்துள்ளது என்பதில் மட்டிலா மகிழ்ச்சி. 3 ஆண்டு மட்டுமல்ல 30 யுகம் தாண்டியும் இக்குழுமம் பயணிக்க வேண்டும் என்பது எனது அவா. தமிழை நேசிக்கும் ஒவ்வொரு ஆத்மாவும் உணர வேண்டும் என்பது காலத்தின் கடமையாகும்.

அந்தவகையில் இவ்வருடமும் குழுமத்தின் முயற்சியாக ஈழத்தின் இறுதி யுத்தத்தில் நடந்த இனப்படுகொலையை நினைவு கூறும் பொருட்டு பல்வேறு திசையிலிருந்தும் பல கவிஞர்களின் கவிதைகளைத் தாங்கி நிற்கும் “முள்ளிவாய்க்கால் சுவடுகள்” எனும் நூலொன்றை வெளியிடுவது மிகச் சிறப்பு. இரவு பகல் பாராது தனது சொந்த வேலைப்பளு மத்தியிலும் இந்நூல் வெளிவர வேண்டும் என்ற ஆசையில் களமிறங்கி உழைத்த அனைவருக்கும் நிர்வாகிகளுக்கும் மற்றும் தகுந்த நேரத்தில் கவிதைகளைத் தந்துதவிய அனைத்து கவிஞர்களுக்கும் என் இதயபூர்வ வாழ்த்துகள்.

**அனுகவி றிப்கான்**
அட்டாளைச்சேனை, இலங்கை



# புதுப்பொலிவுடன் வாழியவே!

காலத்தால் அழியாப் புகழும்
கட்டுக்குலையாப் பேரழகும்
கம்பனையும் வள்ளுவனையும்
கண்ணதாசனையும் பாரதியையும்
எமக்களித்த அருந்தமிழால்..

தேன்சிந்தும் மலரிடையே
வான்முட்டும் புகழுடைய
எங்கள் பூஞ்சோலையே....!
கவிஞர்கள் மனதில் நிறைந்த
எங்கள் கவியுலகப் பூஞ்சோலையே....
உன்னை வாழ்த்துகிறோம்....!!!

மூன்றாம் பிறையானக் கவிஞர்களை
முழுமதியாய் மின்னிடச் செய்தே
தினக்கவிதை, குறுங்கவிதை
கிராமியக் கவிதைகளுடன் ஹைக்கூவும்
பாடலியற்றுவதில் வல்லமையும் தந்தின்று
மூன்றாம் ஆண்டில் முடிசூடும்
எம் கவியுலகப்பூஞ்சோலையே....

மூவாயிரம் ஆண்டுகளாயினும்நீ
புதுப்பொலிவுடன் வாழிய...
வாழிய.... வாழியவே....!

ராஜிலா ரிஜ்வான்

# தமிழ் கொண்டு உலகை வெல்!



தமிழ் கொண்டு உலகை வெல்லும்
கவியுலகப் பூஞ்சோலையின்
மூன்றாமாண்டு வெற்றிவிழாவுக்கு
வாழ்த்துரை வழங்கக்கிடைத்ததை
பாக்கியமெனக் கருதுகின்றேன்.

பெரிது பெரிதென்று சொல்வேன்
பிறத்தலில் மானிடராய்
அரிது அரிதென்று சொல்வேன்
பிறந்ததே தமிழுக்காய்

முகநூலில் மூன்றாண்டுகளாய்த்
தமிழ் வளர்க்கும் சாதனையில்
தனக்கென்று ஓரிடத்தைத் தக்கவைத்துச்
சாதனை கண்ட கவியுலகப் பூஞ்சோலையே
கவியுலகமே நீ வாழி!

முத்தான தமிழ்ப் பேணும்
முகவரிகளாம் கவிஞர்களைத்
தத்தெடுத்த தாயாகச்
சொத்தாகி நிற்பதுவும்
வித்தாகி உலகினிலே தமிழ்
விந்தைகள் செய்துவரும்
கவியுலகப் பூஞ்சோலையே
கவியுலகமே நீ வாழி!

நிறுவனர் நெப்போலியன்
தலைவராய் பால தியாகராஜன்
செயலராய் தென்றல் கவி
மதிப்புறு தலைவராய் ஸ்ரீசக்தி
புடைசூழ்ந்து மணம்பரப்பி
தமிழையே மணக்கச்செய்வதும்
கவியுலகப் பூஞ்சோலையே
உன்னுள்தானே!

கவி வரும் போதெல்லாம்
கனிவான பதில் தந்து
கவிஞர்களைக் கவர்ந்திழுத்து
கரிசனை காட்டுவதும்
கவியுலகப் பூஞ்சோலையே
உனக்கென்ற தனிப் பாணியே!
நித்திலம் உள்ளவரை நீ வாழி!

அன்புடன்
பாசறையில் ஒருவன்

அலியார் சுபைர்
தலைவர் : தேனீ கலை இலக்கிய மன்றம்
இலங்கை.

# வனப்புடன் வாழ்க!



குயில்கூவும் மாஞ்சோலை
கவியுலகப் பூஞ்சோலை

நித்தம் நித்தம்
புத்தம் புதுக் கவிதைமாலை
தொடுத்திடும் பாமாலை...

மெய்யானச் சொற்கள்
பொய்யினைத் தள்ளி
கவியெனத் தன்னை அணிந்துகொள்ளும்
அழகுப் பூஞ்சோலையிலே...

உலகம் ஒருவிதம்
நாடுகள் பலவிதம் எனப்
பன்னாட்டுக் கவிகளின்
பல்வகை சொல்மாலை
கதம்பமென அணிந்து
அழகுறும் நற்பூஞ்சோலை..

வாழ்க வளர்கவென
வனப்புடன் வாழ்த்தும்
கவி நான்...

முனைவர்.பெண்ணியம் செல்வக்குமாரி
புதுச்சேரி



# கவி மணக்கும்
# கவியுலகப் பூஞ்சோலை

வண்ணம் பல பூத்து
வாசம் தினம் வீசும்
வண்டின் ரீங்காரம் எழில்
சோலை எங்கும் கேட்கும்

தேனில் பல சுவைகள்
தேடும் கரு (க)விதைகள்
நாடும் பல கவிகள்
நாடும் தனைத் தாண்டி

பூக்கும் தினம் புதிதாய்
ஆக்கம் வளர் பிறையாய்ச்
சேர்க்கும் திறன் உனதாய்
கவி உலகம் பூஞ்சோலை

தாண்டும் பல தடைகள்
ஓங்கும் புகழ் மலைகள்
தூங்கும் பல கைகள்
துடித்தே எழும் கவியில்

கவி உலகம் தனதாக்கி
திறன் வளர்க்கும் களமாகி
பணி செய்யும் எழில் சோலை
கவி மணக்கும் கவியுலகப் பூஞ்சோலை.

ச.சிபானா

# நமதுறவை வளர்த்திடுவோம்



நாடிடுவோம் கவியுலகப் பூஞ்சோலை முற்றம்!
நமதுறவை வளர்த்திடுவோம் நாமென்றும் சுற்றம்!

.........................................................................................................

முகநூலில் முடிசூட்டி ஆளுகின்ற குழுமம்
முதன்முதலில் கவிப்போட்டி நடத்திவென்ற குழுமம்!
அகமினிக்கும் உறவுகளை வளர்த்தெடுத்த குழுமம்!
ஆற்றலரை ஒன்றிணைத்து உருவெடுத்த குழுமம்!
தகுவிருது தக்கவர்க்கு வழங்குகின்ற குழுமம்
தனித்ததொரு "கவியுலகப் பூஞ்சோலைக் குழுமம்!"
மிகுமகிழ்வில் ஆண்டுமூன்று காணுகின்ற குழுமம்
மணியொலித்துத் தஞ்சைக்கே அணிவகுத்து வருவம்!

பெருவீரன் பெயர்கொண்ட நெப்போலியன் தோழர்
பீடுறவே நடத்துகின்றார் பெருமைமிகு குழுமம்!
தருமமிகு சென்னையிலே மாங்காடாம் ஊரில்
தன்முதலாம் ஆண்டுவிழா கண்டதிந்த குழுமம்!
அருமலர்கள் வரிசையிலே பத்துநூல்கள் பூக்க
ஆண்டிரண்டின் வெற்றிவிழா ஒரத்தநாடு காண
இருநாள்கள் திருநாள்கள் மூன்றாவதாம் ஆண்டில்
இனிதுவிழா காணவென அழைக்கின்றார் வேண்டி!

வள்ளுவரின் திருப்பெயரால் ஒருவிருது! இன்றும்
வாழ்பாரதி பெயரினிலே ஒருவிருது! நெஞ்சை
அள்ளுகின்ற கம்பவனவன் பெயராலும் மேலும்
அணிவரிசை கவிச்சிற்பி கவிஇமயம் இன்னும்

உள்ளொளிரும் கவிச்சுடர் கவிவேந்தர் என்றும்
உயர்விருது ஈந்துவரும் கவியுலகப் பூஞ்சோலை
கொள்கைவழி முகநூலின் குழுமங்கள் கட்கும்
கொடுத்துமகிழ் விருதுகளில் தன்புகழில் விஞ்சும்!

## தமிழுணர்வு

தழைத்திருக்கும் தஞ்சாவூர் உற்ற
தமிழீழக் கதைசொல்லும் முள்ளிவாய்க்கால் முற்றம்!
திமிர்ந்தெழுந்தே தைத்திங்கள் இருநாள்கள் கூடும்
திருநாள்கள் வரலாற்றில் முத்திரையைத் தேடும்!
அமுதொத்த நிகழ்வுகளால் இருநாளும் சிறக்கும்!
அழகுமணக் கவிதைமலர் அரங்கதனில் பிறக்கும்!
கமுகுடனே வெற்றிலையும் கமகமத்து மணக்கும்!
கரங்குவித்துக் கவியுலகப் பூஞ்சோலை அழைக்கும்!

கூடிடுவோம் கவியுலகப் பூஞ்சோலை தன்னில்
கூவிடுவோம் மகிழ்ந்திடுவோம் இராசராசன் மண்ணில்!
பாடிடுவோம் இருநாள்கள் பூஞ்சோலைக் கூட்டில்!
பதித்திடுவோம்... கருத்தரங்கைப் புதுச்சேரி ஏட்டில்!
தேடிடுவோம் புதுமகிழ்ச்சிப் பூஞ்சோலைப் புகுந்து!
திளைத்திடுவோம் காவிரியின் தமிழ்வெள்ளப் பெருக்கில்,!
நாடிடுவோம் கவியுலகப் பூஞ்சோலை முற்றம்!
நமதுறவை வளர்த்திடுவோம் நாமென்றும் சுற்றம்!

திருக்குவளை கவிமாமணி
**வெற்றிப்பேரொளி**

# அரும்பணி ஆற்றிடும் கவியுலகப் பூஞ்சோலை



கவியுலகப் பூஞ்சோலை!
இது முகநூல் கவிஞர்களின்
கனவுலகப் பூஞ்சோலை!

எழில்மிகு சோலையாம் நிறுவனர் நெப்போலியன்
தமிழ் வளர்த்த நற்சோலையாம்

தினமும் போட்டிகள் பல நடத்தி
கவிஞர்களை விருது மழையில் குளிப்பாட்டும்
தமிழ் வானப் பூஞ்சோலை!
தரமான பாமாலை!

மூன்றாம் ஆண்டு விழாவில்
முன்னூறு பேருக்குப் புகழ் மாலை சூட்டுகின்ற
முத்தமிழின் சாரல் மழை!

தென்றல் கவி அறிமுகம்
என்னை அழைத்து இணைத்தது
அழகுச் சோலையில் குழந்தை நான்!

உழைப்பு உற்சாகம்
தளராத ஈடுபாடு
இவையே பூஞ்சோலை
நிர்வாகிகளின் நிலைப்பாடு!

தமிழால் உயர்ந்து
தமிழாய் வளர்ந்து
அரும்பணி ஆற்றிடும்
கவியுலகப் பூஞ்சோலை
நிறுவனர் ஒரத்தநாடு நெப்போலியன்
அவர்களுக்கும்
நிர்வாகிகளுக்கும்
விழாவைச் சிறப்பிக்க வந்திருக்கும்
தமிழ்ச் சான்றோர்களுக்கும்
விழா மலரின் வாயிலாக
எனது மனமார்ந்த வாழ்த்துகளையும்
இணைப்பதில் பெருமை அடைகிறேன்!

அன்புடன்..

**சுதா ஆ.செழியன்**
(சுதந்திர தாசன்)

# மென்மேலும் வளரும் தமிழ்



கவியுலகப் பூஞ்சோலை குழுமத்திற்கும், நிறுவனர் ஒரத்தநாடு உயர்திரு நெப்போலியன் அவர்களுக்கும் எனது முதல் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்..

கவியுலகப்பூஞ்சோலை என்கிற நான்காம் தமிழ் சங்கத்துக்கு வாழ்த்துரை எழுத நான் வல்லவன் அல்ல இருப்பினும் புகழ்பெற்ற நான்காம் தமிழ் சங்கத்தை வாழ்த்துவது எனது கடமை..

தமிழே எனது மூச்சுக்காற்று தமிழா இரு ஒன்றுபட்டு. கவியுலகப் பூஞ்சோலை இது இளம் கவிஞர்களின் பூங்கவிதை. கவிஞர்கள் ஏராளம் ஒவ்வொருவருக்கும் ஒரு சாளரம்.

நான் கல்வி கற்றதோ மிக மிகக் குறைவு உயர் கல்வி கூட பயின்றதில்லை என் தாய் எனக்குத் தாய்பாலுடன் தமிழ்ப்பாலும் ஊட்டியிருக்கிறாள்.

அதனால் தானோ என்னவோ என்னுள் கதை, கவிதை, பாடல் எழுதுவது, தெரிந்த வரைப் பாடுவது எனப் படைக்கும் திறனைச் சிறிதளவு இந்தத் தமிழ்த்தாய் தந்துருக்கிறாள்..

ஆனாலும், அதை எங்கு சென்று வளர்த்துக் கொள்வது என்னுள் இருக்கும் அத்தகைய உணர்வுகளை எங்கே வெளிக் கொணர்வது..

யோசித்துக் கொண்டிருக்கையில் தான் கவியுலகப் பூஞ்சோலை என்கிற நான்காம் தமிழ் சங்கம் வளர்ந்து வருவதைக் கண்டுபிடிக்கிறேன். அதில் இணைகிறேன்.. அங்கே எனக்கான அடையாளத்தைப் பதிக்கிறேன்..

இது ஒரு அற்புதமான குழு
மரபு கவிதை
கிராமியக் கவிதை
ஹைக்கூ கவிதை
புதுக்கவிதை
வெண்பா
படக்கவிதை
பாடல்

எழுதும் போட்டி என அத்தனையும் நடைபெறும் ஒரே தளம் கவியுலகப் பூஞ்சோலையே...

தமிழ் மெல்லச்சாகும் என்று
சொன்னவன் யாரடா
மென்மேலும் வளரும் தமிழ்
என்பதை நிரூப்பிக்கிறோம் பாரடா
நான்காம் தமிழ் சங்கம்
தமிழ் வளர்க்க வந்த
புலவர்களின் புண்ணிய தளம்..

பி.ச.கோபால்குமார்



மணம் மிகுந்த
பூஞ்சோலை வனமிது ..!
தினம் மிகும்
கவிகளைத் தருவது..!

இன்பம் கொள்ளையாய்
இருக்கும் பாவகையால்
இதயம் நிறைய
இனிமை உடையது..!

வகைகள் பலதந்து
தொகையாய் கூடுவது..!
செந்தமிழ் மொழியினைச்
சிந்தையில் விதைப்பது..!

புத்தம்புது பாவகையை
நித்தமும் இணைப்பது ..!
மங்காத் தமிழின்
மகிமை உரைப்பது..!

கவிஞனைப் போற்றும்
உயர்வினைக் காப்பது ..!
உந்தன் புதுமையை
உரைக்கவும் சொல்லேது..!

சூரியக் கதிரையும்
மறைக்கும் கையேது..!
வாழ்ந்திடு பல்லாண்டு
உயர்ந்திடு தமிழோடு..!

கலாலோகநாதன்



அனைத்துக் கவிப் பெருந்தகைகள் அனைவருக்கும் இனிய முதற்கண் வணக்கம்.

எஞ்சிய நேரங்களில் வானை விஞ்சு மட்டும் தமிழுக்காய்த் தன்னை அர்ப்பணித்து மூன்றாம் ஆண்டு விழாவை எட்டியிருக்கும் கவியுலகப் பூஞ்சோலை முகநூல் கவிக் குழும நிர்வாகத்தினர் அனைவருக்கும் அமிர்தம் குழுமத்தின் வாழ்த்துகள் மற்றும் மனமகிழ் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எண் திசைகளிலும் வெண் சாமரம் வீசியே வரவேற்கும் கவிப் போட்டிகளைத் தருவதில் கவியுலகப் பூஞ்சோலைக்கு நிகரேதுமில்லை எனச் சொன்னால் அது மிகையாகாது.

வகை வகையான தமிழ் விருந்தோடு விருதுகள் அளித்து தமிழ் ஆர்வலர்களை ஊக்குவிப்பதில் முதன்மையானவர்கள் என்ற நிலையைக் கூட அவர்கள் விட்டு வைக்கவில்லை.

இப்படிப் பட்டியலிட்டுக் கொண்டே போனால் பக்கங்கள் நீளுமே தவிர அவர்களின் தமிழுக்கான பங்களிப்பு என்றுமே தீராது. முகநூலில் தமிழுக்காய் சேவையாற்றும் பிற குழுமங்களையும் அடையாளங்கண்டு அவர்களைப் பாராட்டவும் இவர்கள் மறக்கவில்லை. இந்நிகழ்வு எனது பார்வையில் முகநூல் கவிக் குழும வரலாற்றில் அவர்கள் கால் பதித்துச் சென்றதாகவே புலப்படுகிறது.

பெரும் புலமை வாய்ந்த கவிஞர்களை நிர்வாகிகளாக தன்னகத்தே கொண்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்பிறையென வளர்ந்து இன்றோ விஸ்வ ரூபமாய்க் காட்சியளிக்கிறது கவியுலகப் பூஞ்சோலை.

வாழ்க அவர்களின் தமிழ்ப் பற்று!..

வளர்க தரணியெங்கும் அவர்களின் புகழ்!..

இவண்


ஜெயசுதா மகேஷ்

நிறுவனர் : அமிர்தம் கவிக்குழுமம்



அன்பாலும் பண்பாலும் உருவான சோலையிது.!
ஆயிரமாயிரம் கவிஞர்களை உருவாக்கும் சோலையிது.!
இதயங்களைக் கவிகளின் நறுமணங்களால் கவர்ந்திழுக்கும்..!
ஈடில்லாப் புகழுடனே மென்மேலும் வளரட்டும்..!
உன்னத தமிழுக்குத் தொண்டாற்றி மணம்வீசும்..!
ஊக்கமும் செயலாக்கமுமாக விருதுகள் மனங்கவரும்..!
எத்திக்கும் எக்காலமும் எல்லையிலாச் சிறப்படையும்..!
ஏமாற்றமில்லா விருதுண்டு சோலைதேடி வருவோர்க்கு..!
ஐம்புலன்களையும் மகிழ்விக்கும் முத்தான ஆண்டுவிழா..!
ஒப்பிலா நிகழ்வுகளால் நறுமணம் வீசிடுமே..!
ஓரொரு கவிதையிலும் தமிழ்மணம் பரவிடுமே..!
ஔவையின் முத்தமிழும் முத்தாகப் பவனிவரும்..!

மைதிலி ரங்கநாதன்



ஆணி வேராய் நிறுவனர் தாங்க..!
பாவலர் பல்லாயிரம் பூத்துக்குலுங்க..!
வார்த்த தமிழ்நீர் ஆழமாய் ஓட..!
கோத்த கவிகள் தரணியை ஆள..!
பத்து நூறெனப் பல்கிப் பெருகி..!
கொத்துக் கொத்தாய் சோலை விரிய..!
எட்டுத் திக்கும் பூஞ்சோலை வாசம்..!
எட்டினாய் இலக்கை சிகரம் தொட்டு..!

படைப்பாளர் போற்றும் பயிற்சித் தளமே..!
பட்டம் சூட்டும் பல்கவிக் களமே..!
வீழாது நிழலாய்ப் படர்ந்து வளரும்..!
வளர்பிறையான வான் முழு நிலவே..!

உரமாய் ஊட்டும் நிர்வாகிகள் சூழ..!
வரமாய் உதித்த கவியுலகப்பூஞ்சோலையே..!
மூன்றாம் ஆண்டில் தடத்தினைப் பதித்தாய்..!
மூவுலகு போற்ற ஓங்கி வளர்வாய்..!

திருமதி. தவமணி ராஜ்குமார்.
இலங்கை.



# உணர்வுகளுக்கு ஊட்டமாக..

விண்மீன்களின் அணிவகுப்பில்
கவியுலகமும் பூஞ்சோலையாய்...!
மலர்களின் வாசத்தில்
மனங்களும் ஒளிர்கின்றன...!

விழிகளின் கோவையில்
காத்திருக்கும் எண்ணங்களும்...!
சிந்தனைகளின் சிதறல்களில்
கற்பனையும் வடிவமாகும்...!

ஆர்ப்பாட்டமின்றி அரவணைக்கும்
அன்புள்ளங்களின் சிறப்பும்..!
கட்டுக்கோப்பானத் திருத்தங்களில்
கலைஞர்களின் உருவாக்கம்...!

மூன்றாம் ஆண்டின்
சிறப்பானக் கலைக்கூடமும்...!
ஊக்கபடுத்தும்  விருதுகளும்
உணர்வுகளுக்கு ஊட்டமாக..!

விழாவினைச் சிறப்பிக்கும்
சான்றோர்களின் கவியருவிகளும்...!
செழிப்புடன் பொழிந்து
செவிகளுக்கு விருந்தூட்டும்...!

அரங்கத்தின் அழகினை
மெருகேற்றும் அனைத்து...!
உறவுகளின் இணைப்பில்
புதுமையினைப் படைக்கும்..!

பானுரேகா.கோ



கவியுலகப் பூஞ்சோலை
கவிஞர்களின் கவிச்சோலை..!
தஞ்சை மண்தந்த தமிழ் மைந்தன்..!
நெப்போலியனின் தமிழ் வளர்க்கும் பணியிது..!

முகநூலில் முத்திரை குழுமமிது..!
எண்ணற்ற கவிஞர்களை ஏற்றம்பெற வைத்ததிது..!
சத்தான பல போட்டிகள் நடாத்தி..!
முத்தான கவிஞர்களை உருவாக்கி..!
தமிழ் பேசும் நல்உலகம்
கவிபாடி மகிழ்கின்றார்
இணைய வழியே..!

விருதுகளால் கவிஞர்களை மகிழ்வித்திடவே..!
வருகிறது ஆண்டு விழா கொண்டாட்டம்..!
சீரும் சிறப்புமாய் சங்கமித்துக் கொண்டாடுவோம்..!

எம் மண்ணின் மைந்தருக்கு நன்றியினை
வாழ்த்தகளாய் வழங்கிடுவோம்!
வாழ்க கவியுலகப் பூஞ்சோலை!

வா.சண்முகம்
கும்பகோணம்.



# தமிழ் போல் வாழ்க!

கவிதையின் சோலை கவிஞர்களின் பூஞ்சோலை..!

தமிழின் அத்தியாயம் தினமோர் அவதாரம்..!

எழுத்துகள் கோக்கும் எண்ணங்கள் சேர்க்கும்..!

வாய்ப்புகளைத் தந்து புகழாரம் சேர்க்கும்..!

கவியுலகப் பூஞ்சோலை உயர்வினைக் காண்பது..!

பல கவி உறவுகளைச் சேர்ப்பது..!

வெற்றிகள் சுடர்விடட்டும் கதிரவன் போல்..!

பல்லாண்டு வாழட்டும் தாய்மொழி தமிழ் போல்..!

மலர்விழி,
திண்டுக்கல்

# தமிழ்த்தேன் சோலை



கவி எழுத களம் புகுந்தேன்
கற்கண் டெனக் குழுக்கள் பல..!

கன்னல் தமிழ் இனிமை யூட்டி
கருத்தில் புகுந்ததே ஓர் உலகாய்..!

கச்சிதமாய்ப் பல போட்டி,
கவிஞர்களின் எழுத்தில் பூட்டி..!
கவியுலகப் பூஞ்சோலை
கன்னித் தமிழ்த் தேன் சோலை..!

கட்டியதே நெஞ்சில் அணை.!
ஹைக்கூவோ, எழில் கொஞ்சும்.!
கவிப் போட்டிகளோ மனம் நிறைக்கும்..!
கவியுலகப் பூஞ்சோலைத் தேன் சிந்தும்..!

புவியுலகத் தமிழ்ச்சோலை இதழ் விரிக்கும்..!

முகநூல் வண்டென மொய்த்து நிற்கும்
முத்தாய்ப்பாய் விழாவில் கவிஞர் கூட்டம்..!

ஆ.நடராஜன்



# அழகிய பொற்காலம்..

சிதறிக் கிடக்கும்
பூக்களைத் தொடுத்தால்
பூமாலை..!

அனைத்துக் கவிஞர்களை
ஒன்றிணைத்திடும்
கவியுலகப் பூஞ்சோலை..!

தத்தித்தத்தி நடந்திடும்
குழந்தைக்குக் கைக்கொடுத்திடும்..!

அன்னையைப் போல
தயங்கித்தயங்கி எழுதிடும்
சிறு கவிஞர்களை
உற்சாகப் படுத்திடும்..!

கைத்தூக்கி இன்று
விருதாளராக்கியப் பெருமை
கவியுலகப் பூஞ்சோலைக்கே..!

ஆர்பாட்டமில்லாது
முத்தான மூன்றாமாண்டில்..!

அடியெடுத்து வைத்து
மண்வாசமிக்க தஞ்சையிலே..!

தரணியை ஒன்றிணைத்திடும்
அழகிய தருணம்..!

நிறுவனர் முன்நிற்க
நிர்வாகிகள் பின்தொடர..!

உறுப்பினர்களின்
கையோசையில்
அரங்கமே அதிர
இனித்திடும் இத்தருணம்..!

நெஞ்சிலென்றும் நீங்கிடாத அழகிய
பொற்காலம்..!

உஷாராணிமணி



# ஒளிர்ந்தெழப் போற்றுகிறேன்!

கலி விருத்தம்

பயிர்வளரும் இலக்கணங்கள்
பயிலவரும் சோலை.
பயிற்சிதரும் பல்வகையில்
பட்டறையிச் சோலை.
குயில்களெல்லாம் கவிபாடும்
கொத்துமலர்ச் சோலை.
மயில்களெல்லாம் நடமாடும்
மல்லிகைப்பூஞ் சோலை.

காண்கின்ற திசைகளெல்லாம்
கவிவடிக்கும் சோலை.
நாண்தொடுத்த வில்லம்பாய்
நாற்றிசையும் பாயும்
ஆண்டுவிழா காணநிற்கும்
அற்புதமிச் சோலை.
ஈண்டிதனைப் பாராட்ட
எனக்கொருசொல் இல்லை.

கவிவாணர் தமைவார்க்கும்
கனகமணி மாலை
கவிமணக்கும் கனிவிருக்கும்
கற்பகப்பூஞ் சோலை.
சிவிகையிலே ஏற்றிவைத்துச்
சிறப்பிப்போம் நாளும்
புவிசிறக்க ஒளிர்ந்தெழநான்
போற்றுகிறேன், வாழ்க.

“அகன்” @ அனுராதா கட்டபொம்மன்

# காலம்போல் வளரட்டும்



கவியுலகப் பூஞ்சோலை யென்ற பேரில்..!
கவிஞர்களை ஒன்றுசேர்த்தே..!

அவர்தம் திறமை புவிமாந்தர்..!
அறிந்திடவே போட்டிகள் நடத்திப்..!

புகழுடையச் செய்திடும்தமிழ்ப் பூங்கா வாழ்க..!
வாழ்க..! வாழ்க..!

கவிமாந்தர் பலர்கண்ட தமிழர் உலகில்
காவியங்கள் பலபடைக்க வைப்போர் வாழ்க..!

கவியுலகப் பூஞ்சோலை என்றும் வாழ்க..!
காலம்போல் வளரட்டும் வாழ்க வாழ்க...!

செண்பக ஜெகதீசன்



# சந்தனமாய் வீசும் பூஞ்சோலை

தமிழ்த் தென்றல் வீசும் அழகு பூஞ்சோலை..!
கவி பாடப் புகழ் பேசும் கவியுலகப் பூஞ்சோலை..!

கரம்பிடிக்கும் கைப்பேசியில் காட்சியைத்
தருகின்ற பூஞ்சோலை.!

கணினியுகத்தில் தமிழ் கவிப் புரட்சி செய்கின்ற
கவிப் பூஞ்சோலை..

தமிழ் மொழி கொண்டு தரணிவாழ் அனைவரையும்..!
அன்புடன் செந்தமிழால் அரவணைக்கும் பூஞ்சோலை..!

பாகுபாடு இல்லாமல் ஏற்றத்தாழ்வு கொள்ளாமல்..!
தாய்மொழியால் ஒன்றே என்றொலித்து பழகும் பூஞ்சோலை..!

போட்டிகள் பல தந்து பொறுப்புடன் பல வெற்றிகளைத் தந்து..!
சான்றிதழ்கள் பல தந்து சான்றோர்கள் வாழ்த்துகள்..!
சந்தனமாய் வீசும் பூஞ்சோலை..!

கம்பன் வள்ளுவன் பாரதி வளர்த்த செந்தமிழைக்
கணினி யுகக் காலத்திலும்..!

காற்றில் கலந்து கடமையாற்றும் முழுமை பெற்ற
முகநூல் பூஞ்சோலை..!

சம பங்காய் வாய்ப்பளித்து நீதி தவறாது தீர்ப்பளித்து..!
நடுநிலை உயர்த்தும் தரமான பூஞ்சோலை..!

நாளைய தலைமுறையை நல்வழிப்படுத்த..!
அன்னைத் தமிழ் வழி நடக்கப் பாதை தந்துதவும் நவீன
கவியுலகத்துப் பூஞ்சோலை..!

பிரதிபலன் பார்க்காமலும்..!
பங்குத்தொகை ஏதும் கேட்காமலும்..!
தமிழ்த் தொண்டே பெரிதெனப்
போற்றும் பூஞ்சோலை..!

வாழ்க வாழ்க வாழ்கவே..!
கணினியிலும் கைபேசியிலும்
செந்தமிழ் சிறக்க - நீ
வாழ்க வாழ்க வாழ்கவே..!

தட்சணாமூர்த்தி
காஞ்சிபுரம்



# நெஞ்சார வாழ்த்துகிறேன்

கண்போல் அமைப்பாம் கவியுலகப் பூஞ்சோலை
எண்ணில் புலவர்க் கெழுச்சியுடன் - மண்மீது
விண்நிகர்த் தொண்டால் வியப்புறவே நிற்பதனால்
பண்ணிசைத்து வாழ்த்துகிறேன் பார்.!

கவியுலகப் பூஞ்சோலை காலமெல்லாம் நின்று
புவியில் நிலைத்திடவே போற்றிக் - கவிதைச்
சிவிகையேறி மண்ணெங்கும் சீறிடவே நானும்
கவினுற வாழ்த்துகிறேன் காண்.!

தஞ்சை நிலத்தினிலே தங்கமென மின்னிடும்
நெஞ்சிலே வஞ்சமிலா நெப்போல்யன் - செஞ்சுடராய்
விஞ்சும் புகழீட்டி விந்தை நிகழ்த்திடவே
நெஞ்சார வாழ்த்துகிறேன் நான்..!

நற்றமிழ் நாட்டிலே நஞ்சைநிறைத் தஞ்சையிலே
வற்றாத செல்வமுடை வள்ளல்போல் - மாற்றமில்லா
நற்றவப் பண்புடை நல்லோன்நெப் போலியனைச்
சுற்றமுடன் வாழ்த்திடுவோம் சூழ்ந்து..!

கவிஞர் முகிலை பாஸ்ரீ

# தமிழ்ப் பரப்பும் பூஞ்சோலை



கவிதைகள் பூத்துக் குலுங்கும் பூஞ்சோலை..!
கவிஞர்கள் ஒன்று கூடும் பூஞ்சோலை..!

மனதினைக் கவர்ந்த பூஞ்சோலை..!
மங்கள நாள் கொண்டாடும் பூஞ்சோலை..!

பாரெங்கும் மணம் பரப்பும் பூஞ்சோலை..!
பரவசமூட்டும் கவிதைகளின் தொகுப்பு பூஞ்சோலை..!

நற்றமிழைப் போற்றிப் பாதுகாத்திடும் பூஞ்சோலை..!

நாற்றிசையும் தமிழ்ப் பரப்பும் பூஞ்சோலை..!

தமிழ்ப் பணியில் முழுமையாம் பூஞ்சோலை..!
தமிழ்க் கவிஞர்களின் பிறப்பிடம் பூஞ்சோலை..!

இரண்டாண்டுகள் கடந்த பூஞ்சோலை..!
இன்னும் பல யுகங்கள் காணட்டும்
எங்கள் கவியுலகப் பூஞ்சோலை..!

வேதகனி அருண்குமார்



# வாழ்கவே வளமுடன்

கவியுலகப் பூஞ்சோலையில்..!

கவிஞர்கள் கவி
மழைத் தூவும்..!
காட்சியது கண்டு..!

நானும் கவி
வடித்தேன்..!
நன்மையே
கிடைத்தது எந்நாளும்..!

இக்குழுமம் எல்லாச்
சிறப்பும் பெற்றிட..!
எல்லாம் வல்ல
இறைவனை..!

வேண்டிக்
கொண்டு வாழ்த்து
கூறுகிறேன்..!
வாழ்கவே
வளமுடன்...!

மு.ஸாஹிரா பானு

# காவியமாகட்டும்



ஆண்டுவிழாக் கொண்டாட்டம்
　　　　ஆனந்த மாகட்டும் !
அருந்தமிழ்ச் செழித்தோங்க
　　　　அறிவுச்சுட ரேற்றட்டும் !

ஆண்டுபல களம்வென்ற
　　　　ஆதிக்கம் செலுத்தட்டும் !
அகிலத்தில் தமிழ்வளர்த்த
　　　　அன்னையென வாகட்டும் !

ஈண்டுபல இளங்கவிகள்
　　　　ஈங்குவளர்ந் தோங்கிடவே
இணையில்லா வளங்கொண்டே
　　　　இச்சோலை விளங்கட்டும் !

நீண்டதொரு சரித்திரத்தை
　　　　நிறைவாக எழுதட்டும் !
கவியுலகப் பூஞ்சோலை
　　　　காவியமா கட்டும் !

## தும்பை தனராஜ் பாப்பணன்



# வாழ்க பல்லாண்டு

முத்தமிழில் ஒளிவீசும் முல்லைமலர்ச் சோலை..!
முகநூலில் புகழ்பரப்புங்கவி உலகப் பூஞ்சோலை..!
எத்திசையும் எழில்வீசும் இனியமலர்ச் சோலை..!
எம்மையெலாம் மகிழ்விக்கும்கவி உலகப் பூஞ்சோலை..!

கவிஞர்பலர் வழிநடத்தும் கவியுலகச் சோலை..!
கவிதைகளை உருவாக்கும் கவியுலகச் சோலை..!

ஆண்டுவிழா மூன்றதனைக் காணுகின்ற சோலை..!
அறிஞர்களின் ஆசியுடன் அமர்ந்திருக்கும் சோலை..!
தித்திக்கும் தேனனைய தீந்தமிழ்ப்பூஞ் சோலை..!
தெவிட்டாத சுவையளிக்கும் தமிழ்மணப் பூஞ்சோலை..!

உலகமெல்லாம் தமிழ்வளர உரங்கொடுக்கும் சோலை..!
உயிருலகில் உள்ளவரை வாழ்க தமிழ்ச்சோலை..!

வந்தாரை வரவேற்று வரமளிக்கும் சோலை..!
வாழ்கபல் லாண்டுகவி உலகப் பூஞ்சோலை..!

ஆ. த. குணத்திலகம்

# கவிகளின் சோலை வளர்க



நஞ்சைநில மன்னன்
　　தஞ்சைமண் கண்ணன்...!
ஒரத்தநாடு அண்ணன்
　　ஓங்குபுகழ் செல்வன்...!

கண்ணனின் எண்ணமதில்
　　பொன்னெனப் பூத்திட்ட...!
கவிகளின் சோலையாம்
　　கவியுலகப் பூஞ்சோலையாம்...!

ஆண்டுகள் இரண்டை
　　அற்புதமாய்க் கடந்து...!
மூன்றாம் அகவையில்
　　முத்தினாய்ச் சிறந்து...!

காந்தத்தமிழ் அகரமாய்
　　கவிக்குழுவின் சிகரமாய்...!
முத்திடும் சிப்பியாய்
　　முத்தமிழ்ச் சிற்பியாய்..!

தத்திடும் பிள்ளையைப்
　　பற்றிடும் அன்னையாய்...!
கவியெழுதும் நல்லோர்க்குக்
　　கரங்கொடுக்கும் தகப்பனாய்...!

அரவணைத்து விருதளிக்கும்
　　நெப்போலியர் மகவுனை..!
அன்புடை தமிழ்நெஞ்சங்கள்
　　ஆசியுடன் வாழ்த்திடுவோம்..!

ப.அருண்



# நிறைவாய்ப் புகழ்ந்தேன்!

(க)
எண்ணிலா ஆண்டுகள் என்றுமே வாழிய!
வெண்ணிலா போலும் விளங்கி'இம் - மண்ணிலே
வீழ்ந்திடா வெற்பெனும் விண்ணுயர் சோலையை
வாழ்த்தினேன் உள்ளம் மகிழ்ந்து.

(உ)
மகிழ்ந்தே மறவாத மாண்புறுங் காவை
நெகிழ்ந்தே நினைத்தேன் நிறைவாய்ப் - புகழ்ந்தேன்
புவிதனில் நல்லவர் போற்றிப் புகழும்
கவியுலகப் பூஞ்சோலை காண்.

(ங)
கண்டேன், தனக்கிணை காட்டல் இயலாத
மென்னடைப் புள்மதி மிக்குடைய - பண்டைமுன்
தென்தமிழ்த் தொன்மொழித் தெள்ளிய பாவல்லோர்
தண்டமிழ்ப் பாப்புனைந் தார்

(ச)
தாரதுதான் நந்நறுந் தண்சோலைக் கால்கோளான்
வீரன்தான், பாவாலே விண்மேவும் - காரதுதான்
நற்கனக மாரியறும் நல்லகவி வல்லோர்க்குப்
பொற்கிழிதான் தந்துமிகப் போற்று.

(ரு)
போற்றாதார் யாவருளர்,  போதாதே யென்புகழ்ச்சி
மாற்றாரும் தூற்றார்  மனமகிழ்வார் -  ஏற்றமுடன்
கண்டோமே கன்னற் கவிப்பெரும,  ஈழத்துச்
செண்டோடு தந்தேன்யான் சேர்த்து.

- *மென்னடைப்புள் = அன்னம்.*
- *கால்கோளான் = நிறுவனர் ஒரத்தநாடு நெப்போலியன்*

பாவலன் வயலூர்ப்புவன்



# சிரஞ்சீவியாய் நிலைக்க..

கவியுலகப் பூஞ்சோலைக்கு..!
விண்ணில் ஒளிரும்
தாரகைப் போல்..!
மண்ணில் மிளிரும்
வண்ணப் பூஞ்சோலையில்..!

கவிகளாய் மலர்ந்து
மணம் வீசும்
தமிழன்னையின் தவப்புதல்வர்களாய்..!
தரணியில் அழியாச்
சிரஞ்சீவியாய் நிலைக்க..!

கவியுலகப் பூஞ்சோலையாய்
தளம் அமைத்து..!

வலம் வரும்
செந்தமிழே நின்
புகழ் நிலைக்க..!

புவியும் கவிபாடுமே
காலம் உள்ளவரை வாழியவே..!

புதியதென்றல் கவிஞர். முபா

# வாழ்கவே கவியுலகப் பூஞ்சோலை



கவி மணம் வீசும்
கவியுலகப் பூஞ்சோலையில்..!
நானும் இணைந்தே
நன்மைகளடைந்தேன்..!

புதுக் கவிஞர்களுக்குக்
களமமைத்துத்
தட்டிக் கொடுத்து..!
ஆர்வமூட்டி
கவிஞனாக்கி..!
மூத்த கலைஞர்களை
வாழ்த்திப் போற்றி
கன்னியப் படுத்தி..!

உற்சாகமூட்டும்
கவியுலகப் பூஞ்சோலை..!
நீண்ட ஆயுளோடு..!
நீண்ட காலம்
பவனி வர..!
வாழ்த்துகிறேன் மனதார..!

வாழ்கவே
கவியுலகப் பூஞ்சோலை..!

ஏரூர்கவி எம். ரி. எம். அன்ஸார்
இலங்கை



# மனதினிய வாழ்த்துகள்!

கொஞ்சும் தமிழ் வளர்க்க..!
தஞ்சை மண்ணுதித்து வந்த..!
மைந்தன் நெப்போலியன் அண்ணாவால்..!
வாஞ்சையுடன் வளர்ந்த பூஞ்சோலை..!

ஏணிப்படிகளாய் புதிய கவிகளை
ஏற்றிவிடும் கவிச்சோலை..!
பெருங்கவிகள் ஒன்றிணைந்து
பூஞ்சோலையாக்கி ..!

கவியெனும் தேன் நிறைந்திருக்க
வண்டெனும் பார்வையாளர்கள்..!

நனைந்தூறிடும் கவியுலகப் பூஞ்சோலையில்..!
கவியாய் நானும் சிறு பூவாய் இணைந்தது..!

மகிழ்வு..!

பல்லாண்டு இப்பணி தொடர்ந்து
பல கவிகளுக்குத் தளம் அமைத்திடக்..!

கவியுலகப் பூஞ்சோலைக்கும்..!
தலைவருக்கும்..!

குழும நிறுவாகத்தினர்க்கும்..!

என் மனதினிய வாழ்த்துகள்!

தி. பிரியங்கா
இலங்கை.